Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 10 [23-04-93] வெள்ளிக்கிழமை ஓசை 64

## பிரேமச்சந்திரா கைதாகி நேற்று விடுவிக்கப்பட்டார்

### துப்பாக்கி வைத்திருந்தாராம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா நேற்றுமுன்தினம் இரவு குருநாகலைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு நேற்று நண்பகல் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அனுமதிப் பத்திரம் இன்றி துப்பாக்கி ஒன்றைத் தம்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக இவர் கைதுசெய்யப்பட்டார். பின்னர் கொழும்பில் அவரின் இல்லத்திலிருந்து அனுமதிப்பத்திரம் எடுத்துவரப்பட்டு பொலிசாரிடம் காட்டிய பின்னர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் பாதை திறப்பதற்கு சிங்கள இராணுவம் முட்டுக்கட்டை

[யாழ்ப்பாணம்]

**காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக யாழ். குடா நாட்டிற்கு உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கான பாதையைத் திறந்து விடுவதற்குச் சிங்கள இராணுவம் தொடர்ந்தும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றது. இதன் காரணமாகவே இப்பாதை திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.**

காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக உணவுப் பொருள்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் கொண்டுவருவதற்கானபாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருந்தமை தெரிந்ததே. இதற்கென முன்னர் பயன்படுத்திய பாதையை பயன்படுத்துவதற்கும் புலிகள் சம்மதம் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றிஅளித்ததாகத் தெரியவில்லை. இராணுவம் பாதையைத் திறப்பதற்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில் புதிய வழி ஒன்றைத் திறக்குமாறு தெரிவித்துள்ளதாகவும் அறியவருகின்றது. இந் நிலையில் காங்கேசன் துறைப்பாதை திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை விடுதலைப்புலிகள் அனுமதி அளித்திருந்த இளவாலை, பண்டத்தரிப்பு வீதியை உள்ளடக்கிய பகுதியில், கடந்த வாரத்தில் இராணுவம் தாக்குதலொன்றை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தெரிவுக்குழு முடிவை அரசு பரிசீலிக்கும்

### மீண்டும் ஜனாதிபதி தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு அதன் சிபார்சை செய்தபின் அரசாங்கம் ஓர் உறுதியான முடிவை எடுக்கும் என ஜனாதிபதி பிரேமதாசா நேற்று மீண்டும் வலியுறுத்தினார்.

நேற்றுக் காலை சிறிலங் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரினை ஆரம்பித்து வைத்து பிரதான உரையாற்றிய பிரேமதாசா, எதிர் வரும் மிகுந்து ஜெயந்தி வைபவங்களுக்கு முன்பாக வடக்கு கிழக்கு ஆயுத மோதலை முடிவுக்கு கொண்டுவர உறுதி பூண்டுகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஜனாதிபதி தனது உரையில் பாதுகாப்புப் படையினரை வெகுவாக பாராட்டிப் பேசினார்.

கடந்த கூட்டத் தொடரில் தமக்கு எதிராக கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றச்சாட்டு பிரேரணையை (10ஆம் பக்கம் பார்க்க)

பாராளுமன்றத்தின்

## ஆரம்ப கூட்டத் தொடரை எதிர்க்கட்சியினர் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கத்தின் இரண்டாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை எதிர் கட்சி உறுப்பினர் 81 பேர் நேற்று பகிஷ்கரித்தனர்.

சிறிலங்கா சுதந்திர கட்சி உட்பட பிரதான எதிர்கட்சிகள் இந்த பகிஷ்கரிப்பில் கலந்து கொண்டனர். முஸ்லிம் காங்கிரஸ், டெலோ ஆகிய கட்சிகள் பகிஷ்கரிப்பில் பங்கு பற்றவில்லை.

அரசாங்கத்தின் கொள்கையை எதிர்த்தும், மாகாண சபைக்கு கூடிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக எதிர்கட்சிகள் பாராளுமன்ற ஆரம்ப கூட்ட தொடரை பகிஷ்கரித்ததாக எதிர்கட்சிகளின் பிரதம கொறடா தெரிவித்தார்.

# 31 இராணுவத்தினர் 2 வாரத் தாக்குதல்களில் பலி

(கொழும்பு)

கடந்த இரண்டு வாரத்தில் மட்டும் அரச படைகள் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 31 படையினர் பலியானதாக கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன நேற்று கூறினார்.

இவற்றில் கடந்த 10ஆம் திகதி மணலாறில் படையினரின் மினிமுகாம் ஒன்றை புலிகள் தாக்கி அழித்தபோது ஓர் இராணுவ அதிகாரி உட்பட 19 படையினர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இடைக்காட்டில் முன்னேறமுயன்ற படையினர்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 5 படையினரும், அநுராதபுரம் காவலரண் ஒன்றின் மீது நடத்தப்பட்ட சினைப்பர் தாக்குதலில் ஒரு சிப்பாயும், மன்னார் தீவில் படையினரின் ஜீப் வண்டிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட 5 படையினரும், ஆனையிறவு கறுக்காய்த்தீவில் நடைபெற்ற மோதலில் ஒரு சிப்பாயுமாக 31 படையினர் இரு வாரத்தில் பலியானதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மன்னார் தீவிலிருந்து மக்கள் வெளியேற்றம்

(மன்னார்)

### தடுக்கும் முயற்சியில் அரசு

மன்னார் தீவில் இருந்து 1100 குடும்பங்கள் மீண்டும் வெளியேற முற்பட்டதை தொடர்ந்து நிலைமையை நேரில்கண்டறிய துறைமுகக் பல்துறை ராஜாங்கஅமைச்சர் எல். எம். எச் மஹரூப் அவசரமாக அங்கு அனுப்பப்பட்டுள்ளார்.

மன்னார் நகர் புதுக்குடியிருப்பு, கரிசல் போன்ற இடங்களில் வாழ்ந்த மக்களே அங்கு நிலவும் பதற்றம் காரணமாக வெளியேற முற்பட்டவர்களாவர்.

மன்னார் தீவில் படையினர் தற்போது அடிக்கடி ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## காயமுற்ற படையின் தொகை ஐந்தாக அதிகரிப்பு

(கொழும்பு)

ஆனையிறவு கறுக்காய் தீவு பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின்போது இரு இராணுவத்தினர் பலியாகினர் என்றும் ஐவர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நடவடிக்கையின் போது காயமடைந்த படையினரின் தொகை இரண்டு என நேற்று முன்தினம் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

## ஜே. வி. பி. உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் கைது

[கொழும்பு]

ஆயுதங்களுடன் இரு ஜே. வி. பி. உறுப்பினர்கள் தென்னிலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எம்பிலிப்பிட்டியாப குதியிலேயே ஆயுதங்களுடன் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து சுழல் துப்பாக்கியும், இரு தோட்டாக்களும் பொலிசாரால் மீட்கப்பட்டன.

கொழும்பில் தலைமறைவாக வாழ்ந்த மற்றுமோர் ஜே. வி. பி. தலைவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து எஸ். எல். ஆர், எல். எம் ஜி. ரக துப்பாக்கிகளும், தோட்டாக்களும் மற்றும் போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டன. இவர் பல்கலைக்கழக மாணவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

## மர்மப்பொருள் வெடித்து பொதுமகன் படுகாயம்

(வவுனியா)

நிலத்தில் கிடந்த பொருள் ஒன்றைக் கண்டெடுத்து அதனை ஆராய்ந்து பார்க்க முற்பட்ட ஒருவர் அப்பொருள் வெடித்ததனால் படுகாயத்திற்குள்ளானார்.

வவுனியா பகுதியில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசமான கணேசபுரத்தில் மூக்கன் சின்னத்தம்பி(வயது 29) என்ற குடும்பஸ்தரே காயத்திற்கு இலக்கானவராவார்.

பல்கலைக் கழக அனுமதி

## வர்த்தகத் துறைக்கும் வெட்டுப்புள்ளி மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

பொறியியல்துறைபோன்றே வர்த்தகதுறைக்கும் 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற இருபரீட்சைகளின் வெட்டுப்புள்ளியும் ஓரேமாதிரியாகக்கருதப்பட்டு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

க. பொ. த. உயர்தரம் 1991 ஆம் ஆண்டு பரீட்சையின் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வடமாகாணத்திற்கு மட்டும் விசேட பரீட்சையாக கருதி அதிகரித்த புள்ளி நிர்ணயிக்கப்பட்டதற்கு எதிராக மாணவர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு நடந்த இரு பரீட்சைகளும் ஒன்றாக கருதப்பட்டு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது தெரிந்ததே.

இதன் பலனாக முதலில் பொறியியல்பீடத்திற்கு வடக் ( 10ஆம் பக்கம் பார்க்க )

வெட்டு காயத்திற்குள்ளான

## இளம் தம்பதிகள் நஞ்சருந்தி மரணம்?

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கில் இளம் தம்பதிகள் வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த சம்பவம் ஒன்று அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தவர்கள் அதே இடத்தைச் சேர்ந்த செ. தருமராசா மற்றும் இவரது மனைவியான செந்தில்வதனா ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களது மரணம் தொடர்பாக தெரியவருவதாவது: நேற்று மாலை அயல் வீட்ட [10 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சேவை

றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.(சி/6356)

### உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை. மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11-30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

### சாண விறாட்டி

கணகணப்பூட்டும் சாண விறாட்டி அடுபபெரிப்பதற்கு சிககனமானது. விறாட்டி விலை ஒன்று ரூபா. 1/- ''மில்க் வைற்'' (சி/6469)

### விளையாட்டுப் போட்டி

(சுன்னாகம்)

சுன்னாகம் குழந்தைகள் விளையாட்டுக் கழகத்தின் 13 ஆவது விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை மாலை 2மணிக்கு நடைபெறவுள்ளது.

### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை திருவருள்மிகு மூத்தநயினார்தேவஸ்தான பரிவாரமூர்த்திகளின் அஸ்ட பந்தன ஹீன பிராயச்சித்த அந்தரித பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26-ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

### ஆண்டுவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை தெற்கு தமிழ்மொழி மாணவ மன்றத்தின் 2ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் 28-4-93 அன்று மன்றத்தலைவர் தலைமையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

### நான்கு மாதமாக சம்பளம் இல்லை.

[கொழும்புத்துறை]

இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் கடந்தநான்குமாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் இன்று வரை வழங்கப்படாததால் ஊழியர்கள் கவலையும். மனவேதனையும் அடைந்துள்ளனர்.

கொழும்பில் உள்ள தலைமைச் செயலகத்துடன் ஊழியர்கள் தமது நான்கு மாத சம்பளக் கொடுப்பனவுகளைப்பெற பல தடவைகள் தொடர்பு கொண்டும் ஒரு வித பலனும் கிடைக்கவில்லை என்று ஊழியர்கள் தமது கவலையையும், அதிருப்தியையும் தெரிவித்துள்ளனர். (24)

---

பிரவேசம் இலவசம்

இன்று- யாழ். சென் றோக்ஸ் விளையாட்டரங்கில்

**யோ. மகேந்திராவின்**

## "பாடு நிலா"

அமுதகான இசைவிருந்து

காலம்:- மாலை 7 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(4737)

---

## சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கும் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

(சி-6439)

---

## நன்றி நவில்கின்றோம்

திரு.

**கந்தையா புவனேந்திரன்**

இம்மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை (10-4-1993) அகால மரணமடைந்த எமது குடும்பத் தலைவர் திரு. க. புவனேந்திரன் (உபதலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை, ஆசிரியர் யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம்) அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து அதனைப் பொறுப்பேற்று நடாத்தி வைத்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினருக்கு எமது நன்றியை முதற்கண் தெரிவிப்பதுடன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண அங்கத்தவர்கட்கும், ஏனைய பிரிவுப் பிரதிநிதிகட்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினருக்கும், ஏனைய அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகட்கும், யா / கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், யாழ் சன்மார்க்க மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும், இலங்கை வங்கி யாழ். மாவட்டக் காரியாலயம், இலங்கை வங்கி - பிரதான கிளை மற்றும் ஏனைய கிளை உத்தியோகத்தர்கட்கும், இறுதிக் கிரியைகளிற் பங்கு கொண்டு மலர்வளையங்கள், பூமாலைகள், அனுதாபங்கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கட்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்ற அதே வேளையில், தனித்தனி நன்றி கூற முடியாமைக்கு வருந்துகின்றோம்.

நன்றி.

91/5 இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம். — மனைவி, பிள்ளைகள்.

(4743)

---

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அன்னையின் மடியில் 20-10-73

ஆண்டவன் பிடியில் 6-5-92

**கந்தசாமி மனோகரி**

(கீதா)

ஆண்டுத் திதி - 25-04-93

எங்கள் ஆருயிர்ச் செல்வமே கீதா எங்களை விட்டுச் சென்று ஓராண்டுகள் பறந்தோடி மறைந்ததம்மா! எங்கள் செல்வமே, மனமோ வேகுதடி; உள்ளம் குமுறுதடி; நீ மறைந்தும் உன் புகழ் பூநகரி, ஜெயபுரம் முழுவதும் உனது புகழ் மறையவில்லை. உனது படிப்புத் திறமை காற்றோடு வீசுதம்மா. பரிதவிக்கும் எங்களுக்கு ஆறுதல் கூறுவாய் மகளே! தண்ணீரில் தாமரைபோல் தழம்புகிறோம் உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை மன்றாடுகிறோம்.

உனது பிரிவால் வாடும்
அப்பா கந்தசாமி (ராசு),
அம்மா (சரஸ்),
அண்ணன் மனோகரன் (ரஞ்சன்),
தங்கை மாலதி (சுதா),
தம்பி இளங்கோ (றமேஸ்).

ஜெயபுரம், பூநகரி.

(4742)

---

கரபந்தாட்ட

## மத்தியஸ்தராக பெண்களை இணைக்க முயற்சி

கரபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையை எடுக்கவும் யாழ். கரபந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்படும் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளவும் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் குறிப்பாக, ஆசிரியர்கள் விருப்பம் தெரிவித்து வருகிறார்கள் எனவும், இவர்களுக்கான வகுப்புக்களையும் பரீட்சையையும். சர்வதேச சட்டதிட்டங்களுக்கமைய நடாத்த யாழ். கரபந்தாட்ட சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக யாழ் மாவட்ட கரபந்தாட்ட சமாசத்தின் தலைவர் கப்டின் டீ. ஏ. எம். குணசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். கரபந்தாட்ட சமாசம் கரபந்தாட்ட மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்யுமுகமாக சமீபத்தில் நல்லூர் சாதனா மகாவித்தியாலயத்தில் நடாத்திய எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையின் முடிவுகள் வெளிவந்துள்ளதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிப் பரீட்சையில் திருவாளர்கள் கே. மனோகரன் பபா, எஸ். இரத்தினகுமார், ஏ. சதீசன், வீ.லோகதாஸ், கே. ராஜாராம் ஆகியோர் விசேட சித்திகள் பெற்றுள்ளார்கள் என்றும்,

திருவாளர்கள் எம். உருத்திரன், இ. செல்வராசா, கே. நாகேந்திரம், கே. சயந்தன், சரா புவனேஸ்வரன், ஜி எம். செபஸ்ரியாம்பிள்ளை, எம். ஜோண்சன். ரீ. றோபட், சீ. பகீரதன். ரீ. பிரேமச்சந்திரன், என். சுதாகரன். ஏ. ஜெயகாந்தன், ரீ. கருணாகரன். இ. ஜசீதரன். ரீ. வாகீஸ்வரன், தொ குரூஸ் ஆகியோர் சாதாரண சித்திகள் பெற்றும் சித்தியடைந்துள்ளார்கள் எனவும் இவர் தெரிவித்தார். (17)

---

## அறிவித்தல்

சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல்

நாளை [24-04-1993] சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆலய வெளி வீதியில் நடைபெறும்.

(4739) —நிர்வாகம்

---

ஊனமுற்றோர் உதவித் திட்டம்/விதவைகளுக்கான

## உதவித் திட்டம்

யாழ் மாவட்டத்தில் இவ் உதவித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடனான ஓர் கலந்துரையாடலை ஏற்படுத்த உள்ளதால் மேற்படி நிறுவனங்கள் தமது பெயர், விலாசங்களை எதிர்வரும் 27-04-93க்கு முன்னதாக இணையக் காரியாலயத்திற்கு நேரிலோ அல்லது கடித மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

யாழ், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,

100, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

COUNCIL OF NGOO, JAFFNA.

(சி-6478)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-23

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ சின்னத்துரை (நல்லதம்பி சின்னத்தம்பி - முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய

ஸ்கொட் (யேசுதாசன் அன்ரன் ஸ்கொட்-கள்ளிக்கட்டைக்காடு - உயிலங்குளம்-மன்னார்)

1991ஆம் ஆண்டு யாழ் - வசாவிளான் ஒட்டகப்புலம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் குறிபார்த்துச் சுட்டதில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப். மீரான் (சண்முகராசா கிருபாகரன்-காரைநகர்-யாழ்)

1992ஆம் ஆண்டு இராணுவம் மற்றும் தேச விரோதிகளின் கூட்டுச்சதியினால் கொம்படி வேம்படிப் பகுதியில் உள்ள தேநீர்க்கடையில் பயணப்பைக்குள் மறைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் சிறுவர்-பெண்கள் உட்பட 20 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6480]

# கறுப்பர்களின் இரத்த ஆறு ஓடும்

# தென்னாபிரிக்க கொலைக்களம்

மரணத்தோடுதான் தனது 50 ஆவது வயதுவரை கிறிஸ் கானி வாழ்ந்தார். கொலை முயற்சிகளில் அவர் பலதடவை மயிரிழையில் உயிர் தப்பியிருக்கிறார், என்றாலும் 'சுதந்திரமான தென்னாபிரிக்காவில் வாழ விரும்பு'கிறேன் என அவர் அடிக்கடி கூறுவார். அவரது ஆசை நிறைவேறவில்லை. கடந்த 11 ஆம் திகதி சனியன்று யோகானஸ்பேர்க்கின் புறநகரான பொஸ்பேர்க்கில் தனது இல்லத்திற்கு அருகில் இருந்த கலைத் தெருவிற்குபுதினப் பத்திரிகை வாங்க காரில் சென்று திரும்பியவரை பின்தொடர்ந்துவந்த வெள்ளையின தீவிரவாதி ஒருவன்அவர் வீட்டிற்கு முன்னாலேயே அவரைச் சுட்டுக் கொன்று விட்டான். நெல்சன் மண்டேலாவிற்கு அடுத்தபடியாக தென்னாபிரிக்க கறுப்பு இன மக்களால் மதிக்கப் பட்டவர். அதே சமயம் தீவிரவாத வெள்ளையரால் மிக மோசமாக வெறுக்கப்பட்டவர். அவர் வாழ்ந்த பொக்ஸ்பேர்க் பகுதியில் வலதுசாரி வெள்ளையரும் பெருமளவில் குடியிருந்தனர். தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை கானி உணர்ந்திருந்த போதும் விடாப்பிடியாக அவ்விடம் விட்டு வேறிடம் செல்ல அவர் மறுத்துவிட்டார் என்னதான் மாற்றங்கள் தென்னாபிரிக்காவில் ஏற்பட்டாலும் எனது எதிரிகள் மனம் மாறப்போவதில்லையென சிரிப்போடு அவர்கூறியிருக்கிறார். ஏனென்றால் அவர் கறுப்பினத் தலைவராக மட்டுமன்றி ஒரு பொதுவுடமை வாதியாகவும் இருந்தார். மிகச் செல்வாக்குடன் விளங்கும் தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் (1991ஆம் ஆண்டு இவர் இப்பதவிக்கு தெரிவானார்) ஆபிரிக்க தேசிய காங்கிரசின் மிகச் செல்வாக்கு பெற்ற உயர்மட்ட நிருவாகக் குழு உறுப்பினர். ஆபிரிக்க தேசிய காங்கிரசின் கலைக்கப்பட்ட இராணுவப் பிரிவான 'தேசத்தின் ஈட்டி'யின்(Umkhonto we sizwe) முன்னாள் படைத்தளபதி மண்டேலாவின் பின்னான தலைமைப்பதவியை வகிக்க தகுந்தவர் என கருதப்பட்ட இவருக்கு எவ்வித பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருக்கவில்லையென்பதே இதிலுள்ள மிகமோசமான பக்கமாகும். கிறிஸ் கானியின் பாதுகாவலர்க்கு ஆயுதங்களைப் பெற்றுக்கொடுக்க நெல்சன் மண்டேலா எடுத்த முயற்சி கைகூடவில்லை. இதனால் 1990-ம் ஆண்டின் பின் கொல்லப்பட்ட 8000 பேரில் ஒருவராகி விட்டார் கிறிஸ் கானி. இவரது கொலை எழுப்பிய உணர்வலைகள் தென்னாபிரிக்கா எங்கேசெல்கிறது என்கிற கேள்வியை மீண்டும் எழுப்பியிருக்கின்றது. ஏனென்றால் கறுப்பின மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட கிறிஸ் கானி போன்ற ஒருவர் - இவர் 1957 ஆம் ஆண்டு ஆபிரிக்க தேசியக் காங்கிரசில் (ஆ. தே. கா) சேர்ந்தவர். பின் 1962-ல் அதன் இராணுவப் பிரிவில் இணைந்தவர்; 1982-ல் அதன் தளபதியானவர்; பின் 1990இல் ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்துவதாக ஆ தே கா அறிவித்தபின் அமைதியான முறையில் பேச்சுவார்த்தைகள்மூலம் மாற்றம்காண விழைந்தவர் - இப்படிப்பட்ட ஒருவரின் படுகொலை எதனைச் சுட்டுகின்றது என்பதே இன்று உலகில் எழுந்துள்ள கேள்வியாகும்.

1990 ஆம் ஆண்டு உலகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட தென்னாபிரிக்காவில் பெரு மாற்றங்கள் நடைபெற்ற ஆண்டு. தென்னாபிரிக்க சனாதிபதி டி கிளார்க் சருவதேச அழுத்தங்கள் காரணமாக நிறவேற்றுமைக் கொள்கையைக் கைவிட்டு ஒருவருக்கு ஒரு வாக்கு என்கிற அடிப்படையில் சனநாயக வழிமுறையை ஏற்பதாக பிரகடனம் செய்த ஆண்டு. அதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டதாக ஆ. தே. கா அறிவித்த ஆண்டு. இதனைத் தொடர்ந்து பெரும்பான்மை கறுப்பின மக்கள் ஆட்சிக்கு வழிகோலும் வகையில் சருவகட்சி மாநாடுஆரம்பமாகியது. சனநாயக தென்னாபிரிக்காவிற்கான மாநாடு கொடேசா (Codesa-Convention for Democratic South Africa) ஆரம்பமானது. சருவதேச உலகமே இம் மாநாட்டிற்கு ஆசிவழங்கியது. பெரும் எதிர்பார்ப்பு உலகெங்கும் நிலவியது. ஆனால் அண்மையில் நடந்தேறிய சம்பவங்கள், வன்முறைகள் இதன் எதிர்காலத்தையே சந்தேகிக்க வைத்துள்ளது. சகல தரப்பிலிருந்தும் இப் பேச்சுவார்த்தைகளுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இவையெல்லாவற்றின் உச்சமாகவே நடக்கும் இப்படு கொலைகள் குறிப்பாக கறுப்பு இன மக்களிடையே நடைபெறும் மிக மோசமான படுகொலைச் சம்பவங்கள் பெருத்த மனத் துயரை உலகெங்கும்ஏற்படுத்தி வருகிறது.

தம் தலையில் தாமே மண் அள்ளிப்போடும் செயலாக கறுப்பு இன மக்களிடையே நடக்கும் இப்படுகொலைகளை எவ்வாறு வெள்ளையரசு திட்டமிட்டு செய்யத் தூண்டி வருகின்றது என்பது தொடர்பான பல இரகசிய தகவல்கள் அண்மையில் வெளியாகத் தொடங்கியுள்ளன. 1950களில் இருந்தே கறுப்பு இன மக்களை நிரந்தரமாக பிளவுபடுத்தும் நோக்கில் கறுப்பு இன மக்களின் குழு வேறுபாடுகளை பயன்படுத்தி தனித்த தாயகப் பகுதிகளை (பண்டுஸ்தான்) உருவாக்கி குழு மதத் தலைவர்கள் சிலரை தனது செல்வாக்கில் வைத்தது. தென்னாபிரிக்க அரசு 1980களின் பின்னர் மிகமோசமான இரகசிய வழிமுறைகளால் கறுப்பினத் தலைவர்களை கொலைசெய்ய, கறுப்பு இன மக்களை கொலை செய்ய பயன்படும் குழுக்களை உருவாக்க உதவ தென்னாபிரிக்க அரசு பல இராணுவ காவல் துறை இரகசிய பிரிவுகளை உருவாக்கியது. இவற்றில் 'Koevoet' எனப்படும் இரகசிய காவல் துறைக் குழு மிகக் கொடுமையாக செயற்பட்டது. இவர்கள் சூலு [Zulu] இனக்குழுத் தலைவர் மெந்கோஸ்து புத்தலேகியை எவ்வாறு பயன்படுத்தினார் என்பது பற்றிய தகவல்கள் தென்னாபிரிக்க அரசையே தலைகுனிய வைத்துவிட்டன. புத்தலேகிக்கு பெருமளவு பணம், ஆயுதங்கள் வழங்கி அவரைக் கொண்டு இன்காதா சுதந்திரக் கட்சி[Inkatha Freedom Party] என ஒரு கட்சியை ஆ.தே.கா. விற்கு எதிராக உருவாக்கி அதனை இரகசியமாக நெறிப்படுத்தினர். மிக மோசமான படுகொலைகளை புத்தலேகியின் இனக்குழுமூலமும் தாமும் சேர்ந்து நடாத்தி முடித்துள்ளனர். கடந்த வருடம்[June] மாதம் 17ஆம் திகதி 'பொய்பதாங்' என்னுமிடத்தில் 45 பேருக்கு மேற்பட்ட ஆ. தே. காங்கிரஸ் ஆதரவாளர்கள் கொலைகளில் 'koevoet' நேரடியாகச் சம்பந்தப்பட்டதும் டிகிளார்க்ஸ்புத்தலேகிக்கு பெருமளவு பணம் வழங்கிய தகவல்களும் அண்மைக்காலத்தில் இப்படுகொலைகளில் சம்பந்தப்பட்டசிலராலேயேவெளிக்கொணரப்பட்டது. இன்றும் கூட கிறிஸ்கானியின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்ளவந்த 17 பேர் படுகொலை நடந்துள்ளது. இப்போதுதான் இரகசிய வழிமுறைகளைக் கையாள்வதை கைவிட்டதாகவும் இரகசிய இராணுவகாவல் துறைக் கொலைக் குழுக்களை கலைந்துவிட்டதாக சனாதிபதி கூறியபோதும் இம் மூன்றாம் சக்திகள் இப்போதும் மறைமுகமாக செயற்படுவதாகவும், இவற்றினைக் கட்டுப்படுத்தும் வல்லமை இன்று தென்னாபிரிக்க அரசிற்கு இல்லையென்றும் கூறப்படுகின்றது.

இவை ஒரு புறம் இருக்க ஆ. தே. காங்கிரசிற்கு உள்ளேயே இன்று கடும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்து பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதன் பயன் என்ன என்பது இன்று உறுப்பினர் மத்தியில் எழுந்துள்ள கேள்வி. படுகொலைகள் மேலும் கோப உணர்ச்சிகளைத் தூண்டுவதால் ''ஆயுதங்களைத் திரும்பத் தாருங்கள்; எம்மவரைக் கொலை செய்யும்போது நாம் பார்த்திருப்பதா?'' என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. இப்போக்கினை மண்டேலா விரும்பாதபோதும் இதன் நியாயத்தை மறுக்க முடியாது. 'பொய்பதாங்' படுகொலைகளின்பின் மண்டேலா பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகி கடும் போக்கினைக் கடைப்பிடிக்க நேரிட்டது. பின் 11 மாதத்தின் பின் - இவ்வருட முடிவிற்குள் இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும், தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்கிற நிபந்தனைகள் பல விதித்து மீண்டும் இவ்வருடம் ஏப்பிரல் மாதம் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார் நிலைமைகள் வெகு வேகமாக மோசமடைவதை தடுக்கும் முகமாக மண்டேலாவும், கிளார்க்கும் தீவிரமாகசெயற்பட்டாலும் எதிர்ப்புக்கள் மேலும் வலுத்துக் கொண்டே போகின்றன. இப்போது கிறிஸ்கானியின் கொலை மீண்டும் வன்முறைகளை தூண்டி விட்டுள்ளது. தனது உறுப்பினர்களை திருப்திப் படுத்துவது மண்டேலாவிற்கு பெரும் பிரச்சினையாக இருக்கப் போகின்றது. உணர்ச்சி மேலிட்ட தொண்டர் ஒருவர் கிறிஸ் கானியின் கொலையை 1914ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் உலகப் போருக்கு ஏதுவான செரஜிவோ படுகொலை சம்பவத்தோடு ஒப்பிட்டார். சில தான்தோன்றித் தனமான நடவடிக்கைகள் காரணமாக கட்சியில் இருந்தும் மண்டேலா குடும்பத்திலிருந்தும் அகற்றப்பட்ட வின்னிமண்டேலா மிகத் தீவிர போக்கினைக் கடைப்பிடித்து வருகிறார். ''நாடாளுமன்றம் போவதற்கு குறுக்கு வழி காண்போர்'' என்றும் ''எதிரிகளின் மேட்டுக்குடியோடு குலாவுவோர்'' என்றும் மண்டேலாவை பெயர் குறிப்பிடாமல் தாக்கி வருகின்றார். தனது கூட்டுக்கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவை தவிர ஏனைய கறுப்பு இனக்கட்சிகள் மண்டேலாவை கடுமையாக எதிர்க்கின்றன. இவை பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள மறுத்ததோடு வெள்ளையரை தாக்கிக் கொல்லவும் தொடங்கிவிட்டன. கட்சிக்குள் நடக்கும் உட்கட்சி முரண்பாட்டால் அண்மைக் காலமாக மண்டேலாவின் தலைமைத்துவம் குறித்து வேறு ஐயப்பாடுகள் எழுகின்றன. 81 வயதில் கடுமையான உழைப்போடு எவ்வளவு காலம் மண்டேலா தாக்குப் பிடிப்பார் என்பதும் பரவலாக எழும் ஐயமாகும். மேலும் கட்சிக்குள் நடந்த சில உட்கட்சிப் படுகொலைகள் பற்றிய செய்திகளும்இன்று வெளிவரத் தொடங்கியுள்ளன. ''இறந்து போன தோழர்கள் பற்றிய விபரம்'' என அண்மையில் வெளி வந்த வெளியீட்டில் 1976 தொடக்கம் 1990ஆம் ஆண்டிற்கும் இடையில் ஆ. தே. கா. இராணுவ முகாம்களில் வதைக்குள்ளாகி காணாமல் போன 265 உறுப்பினர் பெயர்ப் பட்டியல் உள்ளது. இயற்கைக்குமாறான முறையில் தகுந்த காரணங்கள் இன்றி மறைந்தவர்கள் இவர்கள். முன்னர் 30உறுப்பினர்கள் தற்கொலை செய்தவர்கள் எனக் கூறப்பட்டது. உண்மைக்கு மாறானது என்ற தகவலும் அம்பலப்படுத்தப்பட்டதால் ஆ. தே. காங்கிரசிற்கு பெருத்தஇழிவு ஏற்பட்டது. இவ்வாறாக சககறுப்பின கட்சிகளான அனைத்து ஆபிரிக்கக் காங்கிரஸ் (Pan African Congress) அசானியன் (Azanian) மக்கள் முன்னணி போன்றவை பேச்சுவார்த்தைகளைக் கடுமையாக எதிர்த்து வருவது மண்டேலாவிற்கு பெருத்த பிரச்சினையாக உள்ளது. அதுபோலவே தென்னாபிரிக்க அரசின் வளர்ப்புப்பிள்ளை சூலுத் தலைவர் புத்தலேகியும் பேச்சுவார்த்தைகளால்தனக்கு நன்மை இல்லையெனக் கருதி அதனைக் குழப்பமுயல்கிறார். படுகொலைகள் அவரது வழிமுறை. ஏனென்றால் பேச்சுவார்த்தை வெற்றிபெற்றால் நெல்சன் மண்டேலா அநேகமாக சனாதிபதியாவார் என்பதும், இவரது பிரதேச அதிகாரங்கள் யாவும் பறிக்கப்படும் என்பதும் கண்கூடு. இதுபோலவே வெள்ளையர் தரப்பிலும் ஆளும் கட்சியான டி. கிளார்க்கின் தேசியக்கட்சியை தவிர (N.P – National Party) ஏனைய வலதுசாரி தீவிர வெள்ளையர் கட்சிகள் முழுமூச்சாக நிறவெறியை தூண்டி தமது அதிகாரங்கள் பறிபோவதை தடுக்கும் முகமாக ஆயுதக்குழுக்களை உருவாக்கி கிறிஸ் கானி போன்றோரை கொலை செய்யும் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே இன்றும் தென்னாபிரிக்க நிலை என்றும் போல் மிகக் குழப்பமாகவும் உயர் கொதி நிலையிலுமே இருக்கின்றது.

இதிலுள்ளகசப்பான உண்மை என்னவென்றால் இத்தனை குழப்பங்கட்கு மத்தியிலும் தென்னாபிரிக்க வெள்ளை அரசும் அதுசார்ந்த வெள்ளை இனமும் சருவதேச ரீதியாக பெரும் நன்மைகளை அடைவதுதான். 1990 இன் பின்னும் 1992ஆம் ஆண்டு மார்ச் மாதம் தென்னாபிரிக்க வெள்ளையர் மாற்றங்கட்கு பூரண விருப்பத்தை சருவசன வாக்கெடுப்பால் தெரிவித்ததைத் தொடர்ந்து சருவதேச சமூகம் தென்னாபிரிக்காவை அங்கீகரித்து ஏற்க-ஐ. நா. தனது பொருளாதாரத் தடையை நீக்க-இன்று தென்னாபிரிக்கா பெரு நன்மை பெறுகின்றது. சருவதேச வர்த்தக நிதி நிறுவனங்கள் யாவும் மீண்டும் தமது கவனத்தை இங்கு செலுத்தத் தொடங்கிவிட்டன. நாள்தோறும்உயர்மட்ட வர்த்தகக்குழுக்கள் இங்குவந்து எதை விற்கலாம் வாங்கலாம் என ஆலோசனைகள் செய்கின்றன. செருமன். சீனா, தைவான் போன்றவை தமது முதலீட்டை உடனடியாகவே இங்கு அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. பொரிஸ் யெல்ட்சினும் தனக்கு உதவி கேட்டு தென்னாபிரிக்காவிற்கு தூது அனுப்புகிறார். ஒதுக்கிவைக்கப்பட்ட தென்னாபிரிக்க விளையாட்டு வீரர்கள் இன்று உலகெங்கும் வரவேற்கப்படுகின்றார்கள். முன்பு எங்கெல்லாம் மண்டேலாவிற்கு வரவேற்பு அளிக்கப்பட்டதோ இன்று அங்கெல்லாம் கிளார்க்கிற்கு வரவேற்பு. இத்தனைக்கும் நெல்சன் மண்டேலா முழுமையாக நிறவேற்றுமை தீரும்வரை -இடைக்கால அரசு அமையும் வரை பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டாமென உலக நாடுகட்குவிடும் கோரிக்கைகள் எந் நாட்டாலும் செவிமடுக்கப்படவில்லை. காலம் மாறும் வேகத்தை மண்டேலாவால் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதாகிறது. ஏனென்றால் நிற வேற்றுமை நீக்கப்பட்டாயிற்று என்பதன் பின் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அவையெல்லாம் கறுப்பின மக்களை இன்னமும் சென்றடையவில்லை. கல்வியில் சமத்துவம் எனக் கூறப்பட்டது. ஆனால் இதுவரை காலமும் கல்விகற்க எவ்வித வசதிகளும் அளிக்கப்படாத 25 இலட்சத்திற்கு மேற்பட்ட கறுப்பின சிறார்கள் வெள்ளை இன மாணவர்களோடு போட்டி போட்டு கற்கும் தரமும் வாய்ப்பும் எவ்வாறு கிடைக்கும்.? ஏனென்றால் இதுவரை வெள்ளை இன மாணவர்கள் பெற்ற வசதிகள் இவர்கட்கு என்று கிட்டும் என்பது எவருக்கும் தெரியாது.

எனவே இத்தகைய கொந்தளிப்பான சூழ் நிலையில் மண்டேலாவும் கிளார்க்கும் அவசர அவசரமாக கூடிப் பேசி 20க்கும் மேற்பட்ட கட்சிகள் கலந்து கொண்டு சருவகட்சிமாநாட்டில் இடைக்கால அரசை உருவாக்கி பொதுத்தேர்தலை விரைவில் நடாத்த முயல்கின்றனர். ஆனால் இங்கு எடுக்கப்படும் எந்த முடிவுகளும் வலது சாரி வெள்ளை இனக் குழுக்களுக்கு இன்காதா கட்சிக்கு அனைத்து ஆபிரிக்க காங்கிரசிற்கு(Pan African Congress) ஏற்புடையதாக இருக்க வேண்டும் இது நடக்கக் கூடிய காரியமாகஇப்போதைக்கு தென்படவில்லை. அதற்கிடையில் தென்னாபிரிக்கா கொலைக்களமாக மாறுவதுமட்டும் எவ்வித தடையும் இன்றி தொடர்கின்றது. எனவேதான் இன்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் கொந்தளிக்கிறார்கள்; குமுறுகிறார்கள்; தாம் அவசரப்பட்டு விட்டோமா என சிந்திக்க தலைப்படுகிறார்கள்.

பாலகுமாரன்

# ஆஸ்திரேலிய பூர்விக குடிகள் தென்னாசிய வழித் தோன்றல்களா?

ஆஸ்திரேலியாவின் மண்ணின் மைந்தர்களான 'அபாரிஜினி'கள் என அழைக்கப்படும் பழங்குடியினர் தோற்றத்தில் தென்னிந்தியர் போலிருப்பர். மேற்கு ஆஸ்திரேலியாவில் ஒரு சமயம் என்னையும் இவர்களில் ஒருவராகக் கருதி, என்னிடம் தங்கள் மொழியில் பேச ஆரம்பித்தபோது நான் வியப்படையவில்லை. சற்றே தள்ளிநின்று இவர்கள் பேச்சைக் கேட்டபோது பேச்சில் உள்ள ஏற்ற இறக்கங்கள், உணர்வுகளைக் காட்டும் ஒலிகள் அவர்கள் தமிழில் பேசுவது போன்ற பிரமையை உருவாக்கின. மேலும் அவர்கள் பாடல்களில் ராகம் தாள லயம் அவற்றைப்பாடும் விதம் தமிழ்நாட்டுப் பழங்குடியினரின் பாடல்களை நினைவு படுத்தின இவர்களுக்கும் நம்மவர்களுக்கும் உள்ள மேலெழுந்தவாரியான இன, மொழி, சடங்கு ஒற்றுமைகள் பற்றி ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ஆஸ்திரேலியப் பழங்குடியினர் எங்கிருந்து வந்தனர் என்பது ஒரு சுவாரஸ்யமான விஷயம். இன்றைக்கும் நாற்பது ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர், பூமி குளிர்ந்து துருவங்களிலுள்ள பனிப்பரப்புகள் அதிகரித்தன. பனியுகம் என அழைக்கப்பட்ட இக்காலத்தில் கடல்நீர் உறைய, கடல் மட்டம் இன்றுள்ளதை விட நானூறு அல்லது அறுநூறு அடிகள் தாழ்ந்தது அப்போது ஜாவா சுமத்திரா, போர்னியோ 'சுந்தா' மட்டம் எனும் நிலப்பரப்பால் ஆசியக் கண்டத்துடன் இணைந்திருந்தன. இதுபோலவே நியூகினி தீவும் ஆஸ்திரேலியாவும் 'சாகுல்' மட்டம் எனும் தாழ்வான நிலப்பரப்பால் இணைந்திருந்தன. (இன்று சுந்தா', 'சாகுல்' மட்டங்கள் கடலடியில் உள்ளன.) தைமூருக்கு அருகில், அகன்றிருந்த ஆஸ்திரேலியாவுக்கு இடைப்பட்ட குறுகிய கடலின் அகலம் சுமார் ஐம்பது மைல். அப்போது வேட்டையாடிப் பிழைக்கப் புதிய பூமிதேடி அலைந்த ஆசியாவிலிருந்து சென்ற புதிய கற்கால மனிதர் தீவுகள் மற்றும் மேற்கூறிய குறுகிய கடற்பகுதியை கடந்து ஆஸ்திரேலியாவில் குடியேறினர் இவர்கள் கடல் கடந்து சென்றதற்குக் காரணங்கள் பஞ்சம், இனப்பெருக்கம் போன்றவையாகும். வரலாற்றுக் காலத்துக்கும் முற்பட்ட காலத்தில் துணிந்து கடற்பயணம் செய்தவர்களின் வாரிசுகள் இன்றும் அருகிலுள்ள தீவுகளுக்கு உணவுதேடி தெப்பங்கள், கட்டுமரங்கள் மூலம் செல்கின்றனர் (கிம்பர்லிப் பகுதியில் இவர்கள் பயன்படுத்தும் கட்டுமரத்தின் பெயர் கலம்') காற்று, அலை, நீரோட்டம் இவற்றைச் சாதகமாக்கி கடல்மேல் செலுலும் இவர்கள் கலங்களில் குளிர் காயவும், உணவு சமைக்கவும் நெருப்பைக் கொண்டு செல்கின்றனர்.

ஆதிமனிதக் குடியேற்றங்கள் அவ்வப்போது அலை, அலையாகத் தொடர்ந்தன. இவ்வாறு துணிந்து கடற்பயணம் செய்தவர்களில் சிலர் கடலில் மூழ்கி மாண்டிருக்கலாம். சுமார் எட்டு அல்லது பத்தாயிரம் ஆண்டுகட்கு முன் இங்கு குடியேற வந்த ஒரு கூட்டத்தினருடன் மிதவையில் வந்தவை வளர்ப்பு நாய்கள் சில. ஆஸ்திரேலியா வந்த இந்த நாய்கள், மாமிச பட்சிணிகள் இல்லாத இப்பெருந்தீவில் பல்கிப் பெருகி, மெதுவாக மனிதனைச் சார்ந்திருப்பதை விடுத்து, வேட்டையாடி சுயேச்சையாக வாழ முற்பட்டன அதாவது பழக்கப்படுத்தப்பட்ட நாய்கள் காட்டு நாய்களாக ஓடித்திரிய ஆரம்பித்தன. இந்த நாய்களின் வழிவந்தவையே இன்று ஆஸ்திரேலியாவில் உள்ள 'டிங்கோ' எனும் காட்டு நாய்.

இங்கு கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயங்கள் இரண்டு. ஒன்று, நாய் இந்தியாவில் தான் முதல் முதலாவதாக ஒரு வளர்ப்புப் பிராணியாகப் பழக்கப்படுத்தப்பட்டது. நாயின் மூதாதையர் இந்திய ஓநாய்கள். இரண்டாவது உலகிலுள்ள அனைத்து நாய் வகைப் பிராணிகளிலும், 'டிங்கோ'வுக்கு நெருங்கிய உறவுடைய ஒரே விலங்கு, தென்னிந்திய நாட்டு நாய் தான்!

பத்து பதினைந்தாயிரம் ஆண்டுகட்கு முன்னர் பூமி வெம்மையாகி பனிப்பரப்புகள் உருக ஆரம்பிக்க கடல் மட்டம் உயர்ந்து, தாழ்வான கடற்கரைப் பகுதிகளைக் கடல் கொண்டு மேட்டுப் பகுதிகள் தீவுகளாயின. ஆஸ்திரேலியப் பெருந்தீவு, ஆஸ்திரேலியா, நியூகினி, டாஸ்மேனியா எனப்பகுக்கப்பட்டது. தாழ்வான பகுதிகளில் கடற்கரைகளைக் கடல்கொள்ள பழங்குடியினர் தாம் வாழ்ந்த இடங்களை விட்டு மேட்டு நிலம் நோக்கிச் சென்றனர். கடல்கோளால் நிலம் அழிந்தது பற்றியும். அதிலிருந்து தப்பி வந்த தம் மூதாதையர் பற்றியும் பழங்கதைகள் பல உள்ளன. இவற்றில் 'குல்லிபுல்' குடியினரின் பழங்கதை ஒன்று— மாமூன், யார்பிறையன், பிரூன் என்ற மூன்று சகோதரர்கள் தம் மனைவியருடன் உலகின் மத்திய பகுதியிலிருந்து வந்ததாகவும், அவர்கள் ஏறிவந்த கட்டுமரங்கள் கரையில் மோதி சேதமடைய ஆஸ்திரேலியாவை விட்டுப் போக இயலாமல் அவர்கள் அங்கேயே தங்கி விட்டதாகவும், அவர்கள் வழித்தோன்றல்களே பழங்குடியினர் எனகிறது.

இன்று ஆஸ்திரேலியாவில் வாழும் பழங்குடியினருக்கும், தமிழகத்திலுள்ள இருளர், காடர், முதுவர், குறும்பர் போன்ற பழங்குடியினருக்கும் வெகுவான உருவ ஒற்றுமைகள் உண்டு. தமிழகத்தின் தெனகோடியில், ஆதித்த நல்லூரில அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்டையோடுகளில் சில, ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் மண்டையோடுகளின் அமைப்பை ஒத்திருந்தன. மேலும் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன் ஆதித்த நல்லூரில் வாழ்ந்தவர்களின் மண்டையோடுகள் தமிழகததில் இன்று வாழும் பழங்குடியினரின் மண்டையோடுகள் போல அமைந்தவை. இது போலவே மொகஞ்சதரோ அகழாய்வில் கிடைத்த சில மண்டையோடுகளுக்கும், இந்தியாவில் வாழும் கோண்ட, முண்டா, பில் போன்ற பழங்குடியினர், தமிழ் பேசும் பழங்குடியினர், ஆஸ்திரேலியப் பழங்குடியினர் ஆகியோரின் மண்டையோடுகளும் அமைப்பில் ஒற்றுமைகள் பல உள்ளன. ஆஸ்திரேலியாவில் பலவிடங்களில் ஆதிமனித மண்டையோடுகள் கிட்டியுள்ளன. இவற்றை ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளாத நிலையில இவைபற்றி அதிகம் கூறவியலாது. அங்கும இங்கும் கிடைத்த புதிய கற்கால ஆயுதங்களின் பொதுத்தன்மை உலகெங்கிலும் காணப்படுவது ஒன்று. எனவே இதைப் பெரிய சான்றாகவும் கொள்ளக் கூடாது. ஆஸ்திரேலியப் பழங்குடியினருள் சுமார் முந்நூறு மொழிப் பிரிவுகள் உள. இவற்றில் சொற்கள், ஒலிகள் ஓரளவு பொதுவாக இருந்தாலும் அமைப்பில் வெகுவாக மாறுபடுகின்றன. ஒத்தியல்புகள் கருதி இவற்றை வடக்கில் பேசப்படுபவை, தெற்கில் பேசப்படுபவை என இரு பகுப்புகளாக்கலாம். எழுத்துக்கள் இல்லாத இம்மொழிகளில் மாறுபடும் உச்சரிப்புகளினால் வேற்று மொழிகளில் எழுதும் போது பலவிதங்களாக எழுத முடியும் என்ற நிலை, மொழி ஆய்வில் குழப்பங்கள் உண்டாக்குகிறது. உதாரணமாக 'விரதுசாரி' எனும் மொழியில் நீர் என்பதை கலிங், காலிங், கார்லி, காலூன் எனக் குறைந்த பட்சம் ஏழு விதத்தில் உச்சரிக்க முடியும் என்பதால் ஏழு விதமாக எழுதவும் முடியும். இந்த முட்டுக்கட்டை இருந்தாலும், ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் மொழிகள் பற்றி ஆய்வு செய்வோர் அண்மையில் வெளியிட்ட பழங்குடிச் சொற்களின் தொகுப்பினைப் பார்த்த போது தமிழ் போல் ஒலிக்கும் வார்த்தைகளை இனங்கண்டு கீழ்கண்ட தொகுப்பைச் செய்தேன்.

| ஆஸ்திரேலியப் பழங்குடிச் சொல் | தமிழ் சொல் பொருள் |
|---|---|
| நாம் | நாம் |
| நானி | நான் |
| அன் | என் |
| நீனா | நீ |
| இல்லா இல்லா | இல்லை |
| எநா | என்ன |
| இயோ இயோ | ஐயோ ஐயோ |
| நோக்குனா | நோக்கு பார் |
| அபாரி, பூபா | அப்பா |
| மாயி | அம்மா |
| மமல் | மகன் |
| நாகி, அலி | நாய், ஞமலி |
| நிலி | எலி |
| எரா, ஏரம்பா | எறும்பு |
| உண்டி | உடும்பு |
| வோம்பா | பாம்பு |
| காங்கா, கோவா | காக்கா, காகம் |
| கோக்ருரோ | கொக்கு |
| (பாடில்பா) தத்தா | தத்தை, கிளி |
| உண்யா | உணி |
| கோரா | கோறை (புல்) |
| கீரா | இலை (கீரை) |
| தாலாய், தாலின் | தால் (நாக்கு) |
| தா | தாழ் (பாதம்) |
| கண்பிகர் | கண்ணிமை |
| புற யி | புருவம் |
| மூல்யா | (மார்பு) முலை |
| தும்புன் | தாக்கு |
| இடை, இட்ஜி | ஈட்டி |
| கலம் | கலம், கட்டுமரம் |
| (பூமராங்) கொய்லி | கோல் |
| கில்லி | வளை கோல் |
| உலெ | அலை |
| காரிட் | கார் (மழை) |
| வாரிங் | வாரி (கடல்) |
| மரு | (பைன்) மரம் |

ஆதாரம் :ABORIGINAL WORDS OF AUSTRALIA REEDA.W. (1990)

தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம் பற்றி ஆராய்ந்த இராபர்ட் கால்டுவெல் (1856) ''திராவிட மொழிகளிலும், தெற்கு, மேற்கு ஆஸ்திரேலிய மொழிகளிலும் உள்ள பிரதி பெயர்களில் வெகுவான ஒற்றுமைகள் உள்ளன. இதன் காரணத்தை எவ்வகையில் விளங்கினாலும், இந்த பொதுத் தன்மை பற்றி யாரும் மறுக்க இயலாது. என்கிறார் நின்னா, நின்னி நின்ட, ஞான், நின், நிம் போன்ற சொற்களை எடுத்துக் காட்டி ஆஸ்திரேலிய மொழிகளுக்கும், தமிழ் தெலுங்கு போன்ற தென்னிந்திய மொழிகளுக்கும், உள்ள ஒற்றுமைகளைக் காட்டுகின்றார். ஆஸ்திரேலிய மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமைகள் பற்றி 1) தேவநேயப் பாவாணர், 2) பி. இராமநாதன் (ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளும், தமிழும் செந்தமிழ் செல்வி 1984-ப. 361-362) 3) கா. அறவாணன் (தமிழரின் தாயகம்-உலகத் தமிழாராய்வு நிறுவனம்(1984 ப 54-62) ஆகியோர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

காடு, மலை, கடற்கரை ஆறு என்ற இயற்கையின் பகுப்புகளை எல்லைகளாக கொண்டு வாழும் பழங்குடியினரின் நம்பிக்கைகள் வழிபாடுகள் ஆகியவற்றிற்கும் நம் நாட்டுப்பழங்குடியினரின் சில பழக்கவழக்கங்களுக்கும் ஒற்றுமைகள் உண்டு. உதாரணமாக பாம்பின் குறியீட்டை கோலமிட்டு நடத்தப் படும்வழிபாட்டுக்கும் கேரளத்தில் நடத்தப்படும் பாம்பன் துள்ளல் எனும் சடங்குக்கும் உள்ள ஒற்றுமையை அறவாணன் (தமிழரின் தாயகம் ப.56 காட்டுகிறார்.) முன்னோர்களின் வழிபாட்டிலும் அவர்களின் ஆவிகளை இயற்கையின் சக்திகளில் காணும் ஆஸ்திரேலியப் பழங்குடியினர் மறு பிறப்பில் நம்பிக்கை கொண்டவர்கள். இறந்தவர்களுக்கு அடுத்த உலகின் வாழ்க்கைக்கு உதவுமாறு, ஈமக்கிரியைகள் செய்கின்றனர். பிறகு அவர்களை எரித்தோ, காட்டுப்புறத்தில் கிடத்தியோ, குழியில் புதைத்தோ, குகை அல்லது கூடு போன்ற அகன்ற மரப் பொந்துகளில் அடைத்தும் ஈமக்கிரியை செய்கின்றனர் இங்கு 'சுடுவோர் இடுவோர், தொடுகுழிபடுப்போர், தாழ்வயின் அடைப்போர்' என மணிமேகலையால் அறியவரும் சங்க காலத் தமிழர் செய்த ஈமக்கிரியைகளுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் காணலாம்.

ஆஸ்திரேலியாவுக்கே உரித்தானது என்பதாகக் கூறப்படும் 'பூமராங்' எனும் வளைந்த தடிகளை ஆஸ்திரேலியப் பழங்குடியினர் வேட்டையாட உபயோகிக்கின்றனர். பலவிதமான அளவுகளிலும், அமைப்புகளிலும் செய்யப்படும் 'பூமராங்' களில் முக்கியமானது இலக்கைத் தாக்காவிடின் எறிந்தவர் கைக்கே வரும் பூமராங். அடுத்தது திரும்பி வராத, சற்றே கனமானவகை பண்டைய காலத்தில் எகிப்தியர்களாலும் பயன்படுத்தப்பட்ட இந்த எளிய கருவி தமிழ்நாட்டிலும் பயன்படுத்தப்பட்டது. எட்கார் தர்ஸ்டன் (1907) மரம், தந்தம், இரும்பு ஆகியவற்றால்செய்யப்பட்ட கருவி மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உபயோகிக்கப்படுவது பற்றிக் குறிப்பிடுகிறார். இரும்பால் செய்த பிறைவடிவமான வளரிகள் மனிதன் அல்லது மான் போன்ற இலக்குகளைத் தாக்கிக் கொல்ல வல்லவை போலிகர் சண்டையில் இவை உபயோகிக்கப்பட்டன வளரி வீச்சில் திறமை பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள் நாடோடிக் கதைகளிலும், சிவகங்கை அம்மானையிலும் (மு.நடனன் சின்னமருது - வீசிய வளரிக்கம்பு — கணையாழி, ஏப்ரல் 1991 ப. 47-50) உள்ளன. ஒப்பர்ட் என்பவர் (1833) மறவர்கள் கூடி புளியம் வேரினால் செய்த வளரிகள் கொண்டு முயல் வேட்டை நடத்தியது பற்றி விவரிக்கிறார் இன்றும் புதுக்கோட்டை படைக்கலத்தில் வளரிகள் உள்ளன. சில முக்குலத்தோர் குடும்பங்களிலும் இன்றும் இவை பாதுகாக்கப்படுகின்றன.

சுமார் இருநூறு ஆண்டுகட்கு முன்னர் வெள்ளையர்கள் ஆஸ்திரேலியாவில் காலடியெடுத்து வைத்தபோது பழங்குடியினர் மூன்று லட்சம் பேர்கள் இருந்தனர். ஆனால் இப்போதுள்ள இனக்கலப்பில்லா பழங்குடியினர் தொகை அரை லட்சமே! இதற்குக் காரணங்கள், வந்த வெள்ளையர் இவர்களைக் கொன்று குவித்ததும், ஆஸ்திரேலியாவில் அன்று இல்லாத அம்மை, போன்ற நோய்களை அங்கு அறிமுகம் செய்ததும் ஆகும். இப்போது இவர்கள் சுமார் முந்நூற்றுஐம்பது சரணவயம் போன்ற அமைப்புகளில் வாழுகிறார்கள். பலர் ஊர்களின் சுற்றுப் புறத்தேயுள்ள பண்ணைகளில் எடுபிடி வேலை செய்கின்றனர்.

நலிந்து வரும் இந்த இனத்தின் நலனில் அக்கறை காட்டும் வெள்ளை ஆஸ்திரேலியர்களை விரல் விட்டு எண்ணலாம். குற்றவுணர்வால் வெள்ளையர் ஆட்சி இவர்களுக்குத் தரும் சலுகைகள் இவர்களுக்கு மேலும் சங்கடங்களைத் தருகின்றன. உதாரணமாக தாராளமாகத் தரப்படும் மானியங்கள் பழங்குடியினரில் பலரை மதுப் பழக்கத்திற்கு அடிமைகளாக்கியுள்ளது. மதுவும் பழங்குடியினர் வெள்ளையர் வருமுன் அறியாதஒன்று. நாடோடிகளாக குதித்தோடும் கங்காருகள் போல சுற்றித்திரிந்த இவர்கள் மீது 'நாகரிகம்' எனும் போர்வையில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் இந்த சமுதாயத்தின் முதுகெலும்பினை முறித்துவிட்டது

சிருஷ்டி கர்த்தாக்கள் இயற்கையின் சக்திகளில் அசைவாடுவதை உணர்ந்து இயற்கையுடன் இணைந்து வாழும் பழங்குடியினருள் 'கனவு நேர

(5ஆம்பக்கம் பார்க்க)

# பறக்கும் தட்டுகள்

நாம் வாழும் இந்த அண்டம் நமது கற்பனைகளுக்குள் அடங்காதது. நமது சூரிய குடும்பம் இருக்கும் விண்மீன் குடும்பத்தில் மட்டும் 150 கோடி விண்மீன்கள் உள்ளன. அத்தனையும் சூரியனைப் போன்று பெரியவை. சூரியனை விடப் பெரிய விண்மீன்களும் உள்ளன. இதைப்போல் இன்று நமக்குத் தெரிந்திருக்கும் விண்மீன் குடும்பங்கள் மட்டும் பத்துக்கோடி. அனைத்தும் நமது விண்மீன் குடும்பத்தைப் போன்று பெரியவை. இவ்வளவிற்கும் இன்று நாம் பயன்படுத்தும் ஆற்றல் மிக்க தொலைநோக்கிகளின் மூலம் 1500 கோடி ஒளியாண்டு தூரம் மட்டுமே பார்க்க இயலும். நமது சூரிய குடும்பம் இருக்கும் விண்மீன் குடும்பத்தில் மட்டும் சுமார் 200 கோடி கிரகங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது இவற்றில் எங்கேயாவது உயிரினங்கள் நிச்சயமாக இருக்க முடியும். அதுமட்டுமன்றி அவை சிறந்த அறிவாளிகளாக விருப்பதற்கும் நிறைய சாத்தியக் கூறுகள் உள்ளன.

இந்த அளவிற்கு வான நூல் அறிவு வளர்ச்சியடைந்திருக்கும் இந்நாளில், நமது பூமியைத்தவிர பிறகிரகங்களிலும் உயிரினங்கள் இருக்கலாம் என்ற நம்பிக்கை வலுத்து வருவதுடன், இவ் எடுகோள் ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டும் வருகின்றது. இவ் ஆராய்ச்சிகள் தீவிரமாக முடுக்கி விடப்பட்டுள்ள வேளையிலேயே 'பறக்கும் தட்டு' எனும் சொல் 1947 ஆம் ஆண்டு முதன்முதலாக உலகிற்கு அறிமுகமாகியது. ஒரு விமானி தனது விமானத்தில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனிலுள்ள 'றெய்னியர்' என்ற மலையின் மேலாகப் பறந்து சென்றபோது முன் ஒருபோதும் கண்டிராத தட்டுகள் போன்ற புதுவிதமான பொருள்கள் தனது விமானத்தைக் கடந்து சென்றதைதான் கண்டதாக பத்திரிகைகளுக்குத் தெரிவித்தபோதே, இவ் விபரம் உலகிற்கு அறிய வந்தது. இதுவரை இவற்றைக் கண்டதாக ஆயிரக் கணக்கான சாட்சிகள் உள்ளன. இச் சாட்சிகளிலிருந்து பறக்கும்தட்டுகள்சில முட்டை வடிவானவை; சில நூறு அடி விட்டமுடைய தட்டு வானவை; வேறுசில உருளை வடிவானவை என அறியக் கூடியதாயுள்ளது. இவற்றை சிலர் படம் பிடிக்க முயன்றபோதும், ஒளிப்படச் சுருளில் இவற்றின் விம்பம்விழவில்லை எனவும் கூறப்படுகின்றது.

மர்மத்துக்குரிய இப்பறக்கும் தட்டுகளை ஆராய்ச்சி செய்வதற்கு 1966ஆம் ஆண்டில் Dr. Edward U. Condon என்ற கொலரேட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் தலைமையில் ஒருகுழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் ஆராய்ச்சி முடிவுகள் 3 வருடத்தின் பின் 1969ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. அதில் அக்குழுவின் தலைவரான Dr.Condon ''பறக்கும் தட்டுகள் பற்றிய விசாலமான ஆராய்ச்சி முடிவுகளை மேற்கொள்ளுமளவிற்கு நமது விஞ்ஞானம் வளர்ச்சியடையுமென நான் எதிர்பார்க்கவில்லை'' எனக் கூறியிருந்தார்.

இ. சிறிராகவன்
ஆண்டு - 13
பரியோவான் கல்லூரி
யாழ்ப்பாணம்

ஐன்ஸ்டீனுடைய ''சார்பு நிலைக் கொள்கை''ப்படி எந்தவொரு பொருளும் ஒளியின் வேகத்தில் பயணம் செய்வது இயலாத காரியம். ஏனெனில் ஒரு இயங்கும் பொருளின் வேகம் ஒளியின் வேகத்தை அணுக அப்பொருளின் திணிவு முடிவிலியை அணுகுகின்றது. எனவே அப்பொருளை இப்பிரமாண்டமான அளவு சக்தி தேவைப்படும். உதாரணமாக வினாடிக்கு 260,000 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கக்கூடிய ஒரு தொன் எடைகொண்ட ஒரு சிறு விண்கலத்தை நாம் பயன்படுத்துவதாக வைத்துக் கொண்டால், இந்த வேகத்திற் செல்லும் விண்கலம் வேக ஆர்முடுகல் பெற 25,000 கோடி மெகாவாட் மணிகள் ஆற்றல் தேவைப்படும். இது உலகம் முழுவதிலும் ஒரு ஆண்டுக்கு மேல உற்பத்தி செய்யப்படும் ஆற்றலின் மொத்த அளவாகும். மேலும். இந்தவேகத்தில் செல்லுமோர் விண்கலம் இந்த வேகதத்தில் தரையில் இறங்க முடியாது. பாதுகாப்பான முறையில் தரையில் இறங்க இந்தவேகம் பலஆயிரம் மடங்குகள் குறைக்கப்படவேண்டும் அவ்வாறுவேகத்தைக் குறைப்பதெனில் மேலும் 300 மடங்கு அதிக ஆற்றல் தேவைப்படுகின்றது. இதிலிருந்துஇயங்கும் எந்தவொரு பொருளும் ஒளியின் வேகத்தில் பயணம் செய்ய முடியாதென்பது வெளிப்படை.

அவ்வாறாயின், பறக்கும் தட்டுக்கள் ஒளியின் வேகத்தில் பயணம் செய்கின்றன வெனின் ஒருவேளை எமது விஞ்ஞானக் கோட்பாடுகளினடிப்படையில் தவறு இருக்கலாம். அத்தவறினை பூமியிலுள்ள விஞ்ஞானிகள் இதுவரை இனங்கண்டு கொள்ளாது விட்டுமிருக்கலாம். பறக்கும் தட்டு என்று ஒன்று இல்லையென எமக்குச் சாதகமாக நாம் சிந்திப்பதால், பறக்கும் தட்டுகள் இருப்பதற்கான மெய்ச்சான்றுகள்எமக்கு எட்டாது போயிருக்கலாம். சமயம், பழமைப்பற்று, தனிமனித வழிபாடு போன்ற பல செயல்கள் இன்று நமது சிந்தனைகளை ஒரு குறுகிய வட்டத்தினுள் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றன. ஒருவேளை அயல் உலக அறிவுப் பிராணிகள் இச் சிந்தனைத் தடைகளையெல்லாம் தாண்டியிருக்கலாம். முரண்பாடாகச் சிந்திக்க இன்றும் நாம் தயங்குகின்றோம்.

---

## மண்

இருள் முற்றாகச் சூழ்ந்து கொண்டது. செல்லையர் பல நாட்கள் இல்லாத அமைதியான நித்திரையில்ஆழ்ந்தார்.

கோழிகள் எதுவும் கூவாமல், புள்ளினங்கள் எதுவும் சிறகடிக்காமல் அந்த இரவுப் பொழுது விடிந்தது. ஒழுங்கையில் வாகனத்தின் இரைச்சல்கள் அதிகரித்தன. செல்லையர் திடுக்கிட்டுக் கண் விழித்தார்.

''.. ஓ... சிங்கள ஆமி மிகக் கிட்ட உலாவுகிறான்கள்''... செல்லையர் மனதுக்குள் எண்ணியபடி எழுந்தார். தோட்டத்துக்கான கலப்பை மண்வெட்டிகள் வைத்திருக்கும் ஒதுக்குப்புறமான அறைக்குள் நுழைந்து, மேலே செருகி இருந்த அந்தப் பெரிய கத்தியை எடுத்துக் கொண்டார்.

வாழைக்குலைகள் வெட்டுவதற்காக மிகநீளமான கைப்பிடிபோட்ட, கத்தியின் கூர்மைப் பகுதியை விரல்களால் தடவினார். கையை நீட்டி ஓங்கி வீசிப்பார்த்தார், காற்றை விசிறிக் கொண்டு கத்தி சுழன்றது. மூன்று முழத்திற்கு அப்பால் நிற்பவனின்தலையை நிலத்தில் உருளச்செய்யும் சக்தி அதற்கு இருந்தது. செல்லையர் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

கனத்த காலடிச் சத்தங்களும், புரியாத மொழிகளும் மிக நெருக்கத்தில் கேட்டன. செல்லையர் கத்தியை தயார் நிலையில் வைத்துக் கொண்டு சுவருடன் மறைந்து நின்றார்.

எத்தனை தலைகளையும் கழுத்தில் இருந்து கழட்டிஎறிய கத்தி ஓங்கிய நிலையில் நிமிர்ந்து நின்றது.

★

---


## ஆஸ்திரேலிய

உலகம்' எனும் மறுவுலகிலிருந்து வந்து உலகையும், அதிலுள்ள எல்லா உயிரினங்களையுப்படைத்த'வஞ்ஜினா' பற்றிய கதையின் முடிவில் இப்படிக் கூறி விடை பெறுகிறது;

''சிருஷ்டி கர்த்தாவான நான், அனைத்தையும் படைத்த பின் இந்த அழகான பூமியை உனக்குத்தருகிறேன். கதகதப்பான இந்த பூமி உயிருள்ளது. நீராவியாகச் சென்று மழை கொடுக்கும் மேகங்களே இதன் சுவாசம். மழை அனைத்து உயிர்களையும் வாழ்விக்கும். நான் காட்டிய நியதிகள்படி வாழ்வீர்களாகில் பருவங்கள் பொய்க்காது, அழிவு ஏற்படாது.'வஞ்ஜினா' நான் கூறுவது என மக்களான நீங்கள் தவிர அந்நியர்களுக்கு விளங்காது''

நன்றி:

சுபமங்களா, மார்ச்- 1993




1) ஐந்து வெற்றுப் போத்தல்கள்(ஜாம் அல்லது நெல்லி ரசம்) கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு – சுவர்க் கடிகாரம்
2-ம் பரிசு – எவர்சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்
3-ம் பரிசு – மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்
மேலும் 10 ஆறுதல் பரிசுகள்.

3) பின்வரும் இடங்களில் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1) ரேஸ்லைன் இன்டஸ்றீஸ்-14, சீனியர்வீதி, யாழ்ப்பாணம்.
2) அறிவகம் — சாவகச்சேரி.
3) சுபாஸ் பேக்கவுஸ் — நெல்லியடி.
4) சுந்தரம் அன் சன் — சுன்னாகம்.
5) சித்திவிநாயகர் நூல்நிலையம் — ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6317)

### வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்

19 - 04 - 93 அன்று ஈழநாதம் பத்திரிகையில் வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கத்தால் வெளியிடப்பட்ட 'தியாக தீபம் அன்னை பூபதி 5-ம் ஆண்டு நினைவஞ்சலி' விளம்பரத்தில் வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் என்பதற்குப் பதிலாக வடமாகாண ஒப்பந்தக்காரர் சங்கம் எனத் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது என்பதனை அறியத் தருகிறோம்.

லெப். கேணல் சந்தோசம் வீதி, அரியாலை

### அக்கினி வைரவர் ஆலய

புனருத்தாரண நிதிக்காக

சுண்டுக்குளி ராஜன்ஸ் இசைக்குழுவினரின்

## "இசைமாலை"

காலம்– நாளை 24-04–93 சனிக்கிழமை மாலை 8-00 மணிக்கு

இடம்- ஆலயமுன்றல்

விளம்பர அன்பளிப்பு:
**சாண்டோஸ் மதுபானசாலை**
408, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்நிலையம் முன்பாக)

(சி/6476)

சாவகச்சேரி கமநல சேவை நிலையம்

குழாய்க் கிணறு அமைத்தலுக்கான

### கேள்விப்பத்திரம்

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் குழாய்க் கிணறு அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி 7-5-93 காலை 10 மணிக்கு முன் விண்ணப்பப் பத்திரங்கள் இந்நிலையத்தில் நேரடியாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அன்று பகல் 12 மணிக்கு இவ்விண்ணப்பங்கள் திறக்கப்பட்டு, பரிசீலனை செய்து தகுதியான கேள்விதாரருக்கு வேலை வழங்கப்படும். கேள்வி செய்யும் ஒப்பந்தகாரர் நிலையத்துடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும். எல்லா விண்ணப்பங்களும் மூடப்பட்ட உறையினுள்,

நிறைவேற்றுச் செயலாளர்,
கமநல சேவை நிலையம்,
மீசாலை வடக்கு, கொடிகாமம்

என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு கேள்விகளும் பின்வரும் விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும்:

1. நீர் மட்டத்திலிருந்து மேல் நிலம் வரை 4'' பைப் பொருத்துவதற்கான 'பைப்' விலை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

2. குழாய்க்கிணறு அடித்தலுக்கான எந்த விதமான கூலி, கயிறு, இறைப்பதற்கான மிசின்களோ வழங்கப்பட மாட்டாது. 4-5 மணித்தியாலங்கள் தொடர்ந்து இறைக்கக் கூடிய நீர் வசதி உடையதாக அமைய வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும். (4741)

சிறுகதை

# "மணி"

க. சிவராஜா

முற்றம் கூட்டிய விளக்குமாற்றை வேலியில் சாத்திவிட்டு அலுப்புடன் வந்து விறாந்தையில்இருந்து கொண்டாள் சாந்தி. ''முத்தத்திற்கு ஒருவாளி தண்ணி அடிச்சுப் போட்டுக் கூட்டினால் இப்படி புழுதி கிளம்பாது பிள்ளை''... செல்லையர் வாங்கில் இருந்தபடி சொன்னார்.

''ஒவ்வொருத்தருடையவீட்டையும் கூட்டி மெழுகி துப்பரவாக்கிக் கொண்டு பேறது தான் இப்ப எங்கடை வேலையாய்ப் போச்சுது'' அலுத்துக் கொண்டாள் சாந்தி.

''அதுக்குஆர் என்னத்தைச் செய்யிறது'' பெருமூச்சுடன் செல்லையர் வாங்கில் சரிந்து கொண்டார்.

சென்ற வைகாசி மாதம் நடந்த இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த குடும்பங்களில் செல்லையர் குடும்பமும் ஒன்று. பெயருக்கு செல்லையர் குடும்பம் என்ற சொல்லே தவிர, அவர் தனிக்கட்டைதான். மனைவி பத்து வருடங்களுக்கு முன்பே போய்ச் சேர்ந்து விட்டாள்.

மூத்த மூன்று ஆண்பிள்ளைகளும் திக்குக்கு ஒருவராக போய்த் தங்கள் தங்கள் குடும்பங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கடைசிமகள் சாந்தி, கணவனின் வெளிநாட்டு உழைப்புடன் ஐயாவின் பாதுகாப்பில் இரண்டு பிள்ளைகளுடன் ஒரு வருடத்துள் மூன்று வீடுகள் மாறி மாறி கூட்டிப் பெருக்கி துப்புரவாக்கிக் கொண்டு இருக்கிறாள்.

செல்லையர் மிகக்கடின உழைப்பாளி. மண்ணைப் பொன்னாக்கும் மாயவித்தை தெரிந்தவர். முருங்கை மரத்தில் இருந்து முந்திரிகைவரை அவர் கைபட்டால் ஆய்ந்து தொலையாத விளைச்சல் தருவன. மண்ணோடு பேசி பயிரோடு பழகி மிகச் சிறந்த கமக்காரன்என்று பெயரெடுத்தவர்.

இராணுவம் கிராமத்துள் நுழைந்த போது எல்லோரும் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு ஓடியவேளை, செல்லையர்தோட்டத்தையும் வீட்டையும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்.

''... ஐயா ஓடி வாருங்கோ'' சாந்தி பிள்ளைகள் இரண்டையும் கைகளில் பிடித்தபடி ஒழுங்கையில் நின்று அவசரப்படுத்திய நேரத்திலும்..., 'போபிள்ளை நான்வாறன்...' செல்லையர் போக மனமில்லாமல் பின்னால் போனார்.

இன்று தீரும் நாளை தீரும் என்று செல்லையர் ஒவ்வொரு நாளையும் ஆவலோடு எதிர்பார்த்தார். 'ஒருவேளை வீட்டையும் மண்ணையும் பார்க்காமலேயே இறந்து விடுவோமோ' என்று சிலவேளைகளில் அவர் எண்ணுவதுண்டு. அந்தவேளைகளில் அவரையும் அறியாமல் அவரது உடம்பு லேசாக நடுங்கும், கண்களின் ஓரங்கள் ஈரத்தைச் சிந்தும்.

''ஐயா! ஆமி வந்த நேரத்திலை பிடிபட்டவை நேற்று வந்தவர்களாம் கேள்விப் பட்டியளே...?

''ஓம் பிள்ளை... எங்கடை கனசனம் நேற்று வந்தது கந்தையாவைக் கண்டு கதைச்சனான்...''

''ஆர் பாக்கியம்மாமியின்ரை மாமாவோ ?'' கண்களில் ஆவல் ததும்பச் சாந்தி கேட்டாள்.

''ஓமோம்அவன்தான்... எங்கட வீடுகளுக்கு ஒரு சேதமும் இல்லையாம் எல்லாம் கிடக்குது என்டு கந்தையா சொல்லுகிறான்''

''எங்கடை வீடுகளிலை..., வுமி இல்லையாமோ...?''

''ஆமிமுன்பக்கங்களிலைதான் சென்றி போட்டிருக்கிறானாம்... உள்ளுக்கு எந்த நடமாட்டமும்இல்லமல் சுடலை மாதிரிக் கிடக்கெண்டுதான் வந்த சனம் எல்லாம் சொல்லுது...''

''போனவருசம், வருசப்பிறப்புக்குப் பொங்கிப் போட்டுத் தானே வந்தனாங்கள்...இந்த வருசம் இரவல் முத்தத்திலை பொங்க வேண்டிக்கிடக்குது ..'' பெருமூச்சுடன் சொல்லிக் கொண்டாள் சாந்தி.

''பிள்ளை? நீ போனவருசம் பொங்கினதைப் பற்றி சொல்லுகிறாய் நான் அந்த முத்தத்திலை நாற்பது பொங்கலைப் பொங்கிப் படைச்சனான் .. உன்னுடைய அம்மா முதன் முதல் அந்த வீட்டிற்கு வந்துபுது முத்தத்திலைபொங்கினபோது எத்தனை ஏழைச் சனங்கள்ன்ரை வயிறு நிறைஞ்சுது நானும் அம்மாவும் தனிய இருந்தாலும் மூண்டு கொத்து அரிசி வேகிற பெரிய பானையை வைச்சுபொங்கி . வாற போற சனத்துக்குக் குடுத்து,... அந்த முத்தம் வாழை இலைத் துண்டுகளாலை நிறைஞ்சு போய்க் கிடக்கும்...'' செல்லையர் பழைய நினைவுகளைச் சொல்ல அவரது குரல் அடைத்துக்கொண்டது. கண்கள் கட கட என நீரைக்கொட்டின. ஐயாவைத் தனிமையில் விட்டுவிட்டு சாந்தி அடுக்களை நோக்கிப் போனாள். செல்லையரின் நினைவில் அந்த வீடு அந்தத் தோட்டம் எல்லாம் சுற்றிச் சுற்றி வந்தன.

நாளைக்கு புது வருஷப் பிறப்பு. சாந்தி ஓடியோடி வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டாள். அவளது இரு பிள்ளைகளும் தண்ணீர் வாளிக்குள் கைகளை அடித்து அலம்பிக் கொண்டிருந்தனர். செல்லையர் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். அவரது கையில் புதுப்பானையும் அரிசி, சர்க்கரைச் சரைகளும் இருந்தன.

''இந்தாபிள்ளை... பொங்கல் சாமான்... உள்ளை கொண்டு போய் வை...'' கொடுத்துவிட்டு வாங்கில் இருந்து கொண்டார். மடியில் எஞ்சி இருந்த காசை எண்ணினார். பதினாறு ரூபா இருபத்தைந்து சதம் இருந்தது. காலையில் பொங்கல் சாமான் வாங்க வென்று மூந்நூறு ரூபா எடுத்துக் கொண்டு போனவர் பெரிதாக என்னத்தை வாங்கினார்...?

வெறும் பானையும், அரிசியும்சர்க்கரையும்மாத்திரமே... விரக்தியுடன் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

முன்னைய...வருஷச் சந்தைகள் அவருக்கு நினைவுக்கு வந்தன...இரட்டைத் திருக்கல் வண்டிலில் இரண்டுசரைவெற்றிலையையும் போட்டுஅதற்கு மேலாக புகைபோட்ட நாலு வாழைக் குலையையும் திணித்து- பலாப்பழங்களை இடைவெளிகளில் இறுக்கி,எஞ்சிஇருக்கும் சிறியஇடங்களில் உரித்த தேங்காய்களைச் செருகி, ஆசனப் பலகையின் விளிம்பில்இருந்து கொண்டு கருஞ்சிவலையின் கால்களுக்கிடையில் காலை விட்டு 'எய்ய'என உரப்ப விடியற்கருக்கலில் சந்தையின் வாசலில் போய் வண்டில் நின்றால், எத்தனைசனம் ஓடிவந்து மொய்த்துக் கொள்ளும்...

''எல்லாம் போச்சுது... எல்லாம் போச்சுது...'' மேல் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு வாங்கை விட்டு எழுந்தார்.

''இந்தாருங்கோ ஐயாதேத்தண்ணி...'' சாந்தி கொடுத்த தேநீர் பேணியை வாங்கிக் கொண்டு இருந்தார்.

''சந்தையிலைமயிலுவைச்சந்திச்சனான்...அந்தஆளும நேற்றுக்கான் விடுபட்டு வந்ததாம்...நான் எங்கடை இடங்களைப் பற்றி விசாரிச்சனான்.''

'என்ன சொல்லுகிறார்...'?

''கிட்டிணற்றை மில்லிலை எந்த ஒரு சாமானும் இல்லையாம், எல்லாம் ஆமி கழட்டிப் போட்டானாம். மில்லுக்கும் ஞான வயிரவர் கோயிலுக்குமிடையிலை, எந்தவொரு ஆமியின்ரை நடமாட்டமும் இல்லையாம்... இஞ்சைமுகப்பிலை தூரம் ஒரு சென்றி போட்டு ஆமிக்காறர் நிக்கிறாங்களாம்...''

''அதுசரிதான் ஐயா! இவ்வளவு தேசத்திற்கும் ஆமியைப் போடுகிறதெண்டால்... ஆமிக்கு எங்கை போறது ...?'' செல்லையர் குடித்துவிட்டு வைத்த பேணியை எடுத்துக்கொண்டு சாந்தி உள்ளே போனாள்.

செல்லையரின் கண் முன்னால், கிட்டிணற்றைமில்லும், ஞானவைரவர் கோவிலும் இரண்டுக்கும் இடைப்பட்ட ஆள் நடமாட்டமில்லாத பகுதியும் சுழன்று சுழன்று வந்துகொண்டிருந்தன.

விடிந்தால் வருடப்பிறப்பு. பொங்கலும் அதையொட்டிய வேலைகளும் நிறைய இருந்ததால் சாந்தி தன்இரண்டு பிள்ளைகளுடன், நேரத்தோடேயே உறங்கிவிட்டாள். வெளிவிறாந்தையில் வாங்கில் படுத்திருந்த செல்லையர் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

வீட்டு நினைவு அவரைப் பெரிதும் இழுத்தது. முற்றத்தில் நின்று வானத்தைப் பார்த்தார். நிலவு முகில்களுக்குள் மறைந்து மறைந்து கண்ணாமூச்சி காட்டியது.

கிட்டிணற்றை மில்லும், ஞானவைரவர் கோவிலும் .. இரண்டுக்கும் இடையிலான இடுப்பளவே உயரமுள்ள பற்றைகளும் வடலிகளும் கொண்ட வெளியும் அவரது சிந்தனையில் நிறைந்து இருந்தன.

வெளிப்படலையைத் திறந்து கொண்டு வெளியில் நின்று கையை நுழைத்து படலையை முன்போல் கொளுவினார்.

விரைவாக வடக்கு நோக்கி நடக்கத் தொடங்கினார். ஒழுங்கை பாவனையில்லாமல் சருகுகள் குவிந்து கிடந்து செல்லையரின் கால்பட்டு பெரிதாக ஒலி எழுப்பின.

கிட்டத்தட்ட அரை மைல் நடந்து விட்டார். சில வீடுகளில் மங்கியவிளக்கொளி தெரிந்தது. அவை போராளிகளின் காவல் முகாம்கள் என்பது அவருக்குத் தெரியும். அவைகளுக்கு அருகே செல்லாமல் பள்ளிக்கூடத்தின் வேலியைக் கடந்து வகுப்பறைக்குள்ளால் விரைவாக நடந்தார்.

எங்கும் அமைதி மிக இறுகி இருந்தது.செல்லையர் தொடர்ந்து முன்னே நடந்தார்.அவர் எதிர்பார்த்தபடி வெள்ளவாய்க்கால் தென்பட்டது. அதற்குள் இறங்கினார். முழங்கால் அளவு உயரத்திற்கு ஆழமிருந்தது வண்டல் புழுதி பாதங்களுக்குக் கீழ் பஞ்சாகப் பதிந்தது.

அவருக்குத் தெரியும் இந்த வெள்ள வாய்க்கால் மில்லுக்கும் கோயிலுக்குமிடையில் உள்ள பனைகளாலும் வடலிகளாலும் நிறைந்துள்ள பகுதிக்குள்ளல் போகிறது என்று. சிறிது நேரம் தெற்குப்பக்கமாகத் திரும்பி வந்த பாதையைப் பார்த்தார்.

''சாந்தி எழும்பி இருப்பாளோ'' துக்கம் தொண்டையை அடைத்தது.

விறுவிறுவென வடக்கு நோக்கிவாய்க்காலுக்குள்ளால் நடந்தார். அரை இருட்டில் வீடுகள் அடுத்தடுத்துத் தென்பட்டன. வாய்க்காலை விட்டு மேலே ஏறினார். முன்னால் தெரிந்த கட்டடத்தையும் இருளை முக்காடிட்டுக்கொண்டிருந்த புளியமரத்தையும்பார்த்தார். அவரது முகத்தில் புன்னகை படர்ந்தது.

''ஓ.. எங்கடை சங்கக் கடைக்கு வந்திட்டன்'' வாய்விட்டே சொல்லிக்கொண்டார். நின்று நிதானமாக சுழன்றுவர கண்களைஅலைய விட்டார். எந்த நடமாட்டமும் தெரியவில்லை. 'கந்தையாவும், மயிலுவும் சொன்னது உண்மை தான்...ஆரும் இல்லைத்தான்...'

இந்தச் சங்கக் கடைக்குப் பின்னால் ஊர்ப்பிள்ளைகள் விளையாடுகிற 'கிளித்தட்டு' மைதானம். அதனைக் கடந்தால்... பொன் கொழிக்கும் அவரது மண்ணும்...வீடும்... நெஞ்சுக்குள் மகிழ்ச்சிகுளிராக ஓடியது. கால்கள்பரபரத்தன.

அகலத்திறந்து கிடந்த சங்கக்கடை வாசலால் உள்ளே நுழைந்து பின்வேலியை எட்டிக்கடந்து...மைதானத்தை குறுக்காக ஓடி வேலியோரத்தில் நின்றார்.நிலவைநிமிர்ந்து பார்த்தார்.

வானில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் ஏறி இருந்தது. ''நேரம் பதினொன்று இருக்கும்...'' மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

வெற்றிலைக் கொடியை சோழகக் காற்று அடித்துக் கொட்டிப் போடும் என உயரத்திற்கு பனை ஓலை நிறுத்திக் கட்டிய அவரது வேலி. வேலியில் கையை வைத்தார். கறையான்களின் ஆக்கிரமிப்பிற்கு முற்றாக உள்ளாக்கப்பட்ட வேலி,கைவைத்தவுடன் மண்ணாக உதிர்ந்து கொண்டது. செல்லையர் மனதுக்குள் சிரித்துக் கொண்டார். வெற்றிலைத் தோட்டத்துக்குள் கால்களை வைத்தார். பாத்திகள் நிறைய சருகுகள் கிடந்தன. மிக மெதுவாக காலை ஊன்றினாலும் பலத்த சத்தம் கேட்டது.

முள் முருங்கை மரங்கள் இலைகள் இன்றி வெறும்தடிகளாக நின்றன. செல்லையர் மேலே பார்த்தார் நிலவு அம்மணமாகத் தெரிந்தது.... முன்னர் சூரியனையே தெரிய விடாமல் மரங்கள் மதாளித்திருந்தன. ஒவ்வொரு முருங்கைமரமாகத் தடவிப் பார்த்தார்.கட்டை விரல்மொத்தத்தில் படர்ந்திருந்த வெற்றிலைக் கொடிகள்...காய்ந்து, கருகி அவர் கைபட்டதும் உதிர்ந்து விழுந்தன. செல்லையருக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. ஒவ்வொரு சந்தை முறையிலும் ஒவ்வொரு குலை வெட்டும் வாழைத்தோட்டம்... வளைந்து நின்று மண்ணை முத்தமிட்டன. சென்ற வைகாசி மாதம் போகும் போது செழித்து வளர்ந்த நிலையோடு நின்ற மரவள்ளித்தோட்டம் தாறுமாறாக இழுத்தெறியப்பட்டு பொட்டல் வெளியாகத் தெரிந்தது.

செல்லையர் தோட்டத்தைக் கடந்து வீட்டைநோக்கி நடந்தார். வீட்டின் படலை மாத்திரம் அல்ல, அறைகளின் கதவுகள் யாவும் அகலத் திறந்திருந்தன.சாந்தியின்கைப் பையில் எல்லா அறைகளின் திறப்புகளும் பத்திரமாக இருப்பதை நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டார்.

மெல்லக் கால் வைத்து வீட்டுக்குள் நுழைந்தார். ஒவ்வொருஅறையாகப் போனார் பூசை அறையில் நுழைந்து தலைக்குமேல் கையெடுத்துக் கும்பிட்டார். சமையலறைக்குள் போனார். துர்நாற்றம் வீசியது...மூக்கைப் பிடித்துக் கொண்டு சாந்தியின்அறையை எட்டிப் பார்த்தார். தோட்டத்தால் வந்து அலுப்புடன் சரியும் அவரது சாய்வுக்கதிரை மூலையில் கிடந்தது. அதன் புழுதியை மேல்துண்டால் தட்டிவிட்டு சிலநிமிடங்கள் அதில் படுத்தார். வாய்விட்டு சத்தமாகச் சிரித்துக்கொண்டார்.

பின்னர் எழுந்து வீட்டைச் சுற்றி வந்தார். கிழக்குவேலிக் கரையில் நின்ற செவ்விளநீர் மரத்தைநிமிர்ந்து பார்த்தார். ஊரில் யாருக்கு நோய் வந்தாலும் இல்லை எண்ணாமல் கொடுத்துக்கொண்டு வந்த அந்தமரம்...தேங்காய்களுடன் குரும்பைகளையும் உதிர்த்து விட்டு பட்டுப்போய் நின்றது. செல்லையர் கண்கள் கலங்க அந்த செவ்விளநீர் மரத்தை தடவிக் கொண்டார்.

செல்லையர் திரும்பத் திரும்ப வீட்டைச் சுற்றி வந்தார். சுவரை அன்புடன் தடவிக் கொடுத்தார். மண்ணில் விழுந்து பலமுறை கும்பிட்டுக் கொண்டார். வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தபடி மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக்கொண்டார்.

நடுமுற்றத்தில் மேல் துண்டை விரித்து விட்டு, வானத்தைப் பார்த்துக் கொண்டு படுத்துக் கொண்டார். சந்திரன் காணாமல் போய்க் கொண்டிருந்தான்.

அவரது நினைவுகள் படிப்படியாக விரிந்தன. இந்த மண்ணில், மண் குடிலாக இருந்த வீடு கடினஉழைப்பின் பயனாக கல் வீடாக மாறினதும்... லட்சுமிமாதிரி மனைவி பவளம் காலடி வைத்த பிறகு வீடு கலகலப்பாகவிரிந்ததும் தொடர்ந்து நான்கு குழந்தைகள் ஒன்றன்பின் ஒன்றாய் தவழ்ந்து, வளர்ந்து பெரியவர்களாகி ஒவ்வொருவராகவெளியேறியதும் .. நல்லநாள் பெருநாள் என்று எல்லோரும்ஒன்று கூடிக் குதூகலித்ததும்... ...திடீரென 'பவளம்' கண்களை மூடியபோது, இந்த முற்றத்து மண்ணில் தான் புரண்டு கதறியழுததும் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வந்தன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில், தமிழர் அரசியல்

**1989**இன் பிற்கூறில் நடந்த சம்பவம் இது.

மோதிலால் நேருவின் வீடு பம்பலப்பிற்றியில் கடலை நோக்கிச் செல்லும் அசோகா கார்டினில் இருந்தது. நெரிசலான, அகலம் குறைந்த சாலையில் அநேகமாக அவருடைய வீட்டின் முகப்பை மறைத்துக் கொண்டு அவருடைய வோக்ஸ்வேகன் கார் காணப்படும்.

ஒருநாள் பின்மாலைப் பொழுதில் இரண்டு இளைஞர்கள் நேருவிடம் வந்தார்கள். நேரு தன்னுடைய அறைகளுக்குச் சாம்பராணிப் புகை காட்டிக் கொண்டிருந்தார். இளைஞர்களில் ஒருவர் ஒரு வழக்கு சம்பந்தமாக நேருவுடன் கதைத்தார். நேரு அவரை மறுநாள் காலை கொழும்பின் ஒதுக்குப் புறத்திலுள்ள நீதிமன்றம் ஒன்றிற்கு வரும்படி சொன்னார். இளைஞர் தயங்கியபடி நின்றார். நீதிமன்றத்திற்குச் செல்லும் வழியை நேருவிடமே விசாரித்தார். நேரு சற்று எரிச்சலடைந்தவராகக் கேட்டார் ''ஏன் கொழும்பு தெரியாதா? கொழும்புக்குப் புதுசா?''

''ஓம்''.

''எந்த இயக்கம்? எந்த இயக்கம்?'' இம்முறை குரல் சற்று மிரட்டலாக ஒலித்தது. இளைஞர் பதில் சொல்லவில்லை. நேரு குரலை உயர்த்திச் சொன்னார்: ''நீங்கள் ஈழம் என்று கேட்கப் போய்த்தான் எல்லாம் இப்படி வந்திருக்கிறது.'' ஈழம் என்ற சொல்லை அழுத்திக் கூறிய போது நேருவின் தொனியில் வெறுப்பும், எரிச்சலும் காணப்பட்டதாக மேற்படி இளைஞர் பின்னர் தனது நண்பர்களிடம் சொன்னார்.

அப்பொழுது நேரு அகில இலங்கைத் தமிழ்க் கொங்ரஸின் பிரதித் தலைவராக இருந்தார். கொங்ரஸில் சேர முன்பு அவர் இலங்கைக் கொம்யூனிஸ்ற் கட்சியில் இருந்தார். இம்மாதம் மூன்றாம் திகதியோடு அவர் யு. என். பி. யில் சேர்ந்து விட்டார். வரும் மாகாணசபைத் தேர்தலில் அவர் மேல் மாகாணத்தில் யு. என். பி. வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

கடந்த நான்காண்டு கால அரசியல் சூழலையும் அவதானித்த பின் தான் இந்த முடிவுக்கு வந்ததாகவும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதி திடசித்தத்துடனுள்ளார் என்பதை அவர் தெளிவாக நிரூபித்திருக்கிறார் என்றும், இத்தருணத்தில் தமிழர் என்ற முறையில் ஜனாதிபதியின் கையைப் பலப்படுத்த வேண்டும் என்ற கருத்து தனக்குத் தோன்றியதாகவும் நேரு இப்பொழுது கூறுகிறார்.

கடந்த ஆண்டிலிருந்தே நேரு பிரேமதாஸாவை நோக்கி சரியத்தொடங்கி விட்டார். குறிப்பாக ஜனாதிபதியின் சட்டத்தரணியாக அவர் நியமிக்கப்பட்டதோடு, மேற்படி நியமனத்தை அவர் பெறுவதற்குரிய வகைகளில்சிபாரிசுகளை செய்ததும் அதற்கு வேண்டிய விதத்தில் செல்வாக்கைப் பிரயோகித்ததும் கொங்ரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் என்று கூறப்படுகிறது. இன்று கொழும்பில் அரச சார்பு பத்திரிகைகளில் கடுமையாக விமர்சிக்கப்படும் ஒரு தமிழ் மிதவாதி குமார் பொன்னம்பலம்தான். பிரேமதாஸ, நேருவுடனான சந்திப்புக்களின் போது அவருடைய இயல்பையும் அபிலாசைகளையும் சரியானபடி அடையாளங் கண்டு விட்டார் என்றும் அந்த வகையில் அவர் நேருவை படிப்படியாக குமாரிடம் இருந்து கழட்டி எடுத்துவிட்டார் என்றும் கொழும்பில் பரவலாகக் கதைக்கப்படுகிறது.

சில மாதங்களிற்கு முன்பு, நேரு பம்பலப்பிற்றி கதிரேசன் கோயிலில் ஜனாதிபதியின் நலன் வேண்டியும் நாட்டின் நலன் வேண்டியும் பிரார்த்தனையிலீடுபட்ட போதே அவர் எங்கே நிற்கிறார் என்பது தெரிந்து விட்டது. எனினும் இடையில் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பாக அவர் இந்திய நீதிமன்றில் தோன்றப்போவதாக ஒரு செய்தி வெளிவந்தது அப்பொழுதே இது ஒரு அரசியல் ஸ்ரன்ட் என்று விமர்சகர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்.

சண்டே ஒப்சேவர் கடந்த வருடத்தின் இறுதியில் அதன் ஆசிரியத் தலையங்கங்களில் குமார்பொன்னம்பலத்தை மிகவும் இழிவான முறைகளில் நிந்தித்துஎழுதியிருக்கிறது. இத்தகைய ஒரு ஆசிரிய தலையங்கம் பிரசுரமான அதே ஒப்சேவரில் ஆசிரியத் தலையங்கத்திற்கு எதிர்பக்கத்தில் சமஷ்டி யோசனைகள் பற்றி சில பிரமுகர்களின் கருத்துக்களும் அவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன அதில் நேருவும் இடம் பெற்றிருந்தார். கட்சியின் தலைவரைச் சாடிய அதே ஒப்சேவரில் கட்சியின் பிரதித்தலைவர் கணிப்பும் முக்கியத்துவமும் பெற்றிருந்தார். இப்படி நேருவை குமாரிடமிருந்து கழட்டி எடுப்பதில் கடைசியாக பிரேமதாஸா வெற்றியடைந்து விட்டார் என்றே கூறவேண்டும். நேரு யு. என். பி யில் சேர்க்கப்பட்டதிற்குரிய கட்சியின் அங்கத்துவ அட்டையை பிரேமதாஸவே, நேரடியாக சுசரித இல்லத்தில் வைத்து அவரிடம் கொடுத்தார். தினகரன் வாரமஞ்சரி இச்சம்பவத்தை தனது தலைப்புச் செய்திக்கு மேல் பெட்டிகட்டி புகைப்படத்தோடு பிரசுரித்திருந்தது. அங்கத்துவம் பெறுவதற்குரிய ஐந்து ரூபா நாணயத்தை நேரு கொடுக்க முயன்ற போது பிரேமதாஸர் ''சட்டத்தரணிகள் கூடுதலான தொகை தர வேண்டும்'' என்று பகிடியாகச் சொன்னார். நேரு தன்னிடம் ஐந்து ரூபாய் மட்டுமே இருக்கிறது என்று பதில் சொன்னார். தன்னிடம் சட்ட உதவி கோரி வருபவர்களிடம் நேரு சற்று அதிகமாகவே காசு வாங்குபவர் என்பது பிரேமதாஸவிற்கு தெரியாமலா இருந்திருக்கும்?

மாகாணசபைத் தேர்தலில் நேருவை வேட்பாளராக நிறுத்துவது பற்றி அவருடன் சம்பிரதாய பூர்வமாக பேசும்படி பிரேமதாஸ கொழும்பு நகர பிரதிமேயர் கணேசலிங்கத்திடம் கேட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் கணேசலிங்கம், நேருவை தான் எப்பொழுதுமே விரும்பியதில்லை என்று கூறி மறுத்து விட்டதாகவும், பின்னர் அமைச்சர் ஹமீற் இக் காரியத்தைச் செய்ய ஒப்புக் கொண்டதுடன் நேரு சுசரிதவில் வைத்துக் கட்சி மாறிய சம்பவத்தில் கணேசலிங்கத்தையும் கலந்து கொள்ளச் செய்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

நேரு, தமிழ் மிதவாத அரசியலில் இன்றியமையாத பாத்திரம் எதையும் வகித்தவரல்ல. 89 பொதுத்தேர்தலில் அவர் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிட்டு மொத்தம் 127 வாக்குகளைத் தான் பெறமுடிந்தது. தனது தனிப்பட்ட ஆற்றல்களாலன்றி தான் சார்ந்த கட்சியின் பின்னணிப் பலம் காரணமாக முக்கியமாக குமார் பொன்னம்பலத்தின் செல்வாக்கினால் கொழும்பில் ஒரு முன்னணி தமிழ் சட்டத்தரணியாக அவரால் உயர முடிந்தது. கொழும்பு மைய தமிழ் மிதவாத அரசியலில் குமார் பொன்னம்பலத்தைத் தவிர்த்து நேருவுக்கென்றொரு தனியான பலம் இருந்ததுமில்லை.

ஒரு முன்னணி சட்டத்தரணியாக அவர் பெற்றிருக்கும் பிரபல்யம்மேல்மாகாணத்தில் ஏற்கனவே யு.என்.பி.க்குள்ள நிரந்தரமான தளத்தின் மீது அவர் தன்னை நிறுவ உதவப் போகிறதுமேல்மாகாணத்தில் வசிக்கும் தமிழர்கள் எப்பொழுதும்யு.என்.பி. யின் பக்கம்தான்.


நேரு கட்சி மாறியது, கொழும்பில் தமிழ் மிதவாதிகள் மற்றும் மிதவாத வழிமுறைகளிற்குத் திரும்பி விட்டதாகக் கூறிக் கொள்ளும் தமிழ் இயக்கங்கள் மத்தியில் எத்தகைய அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்று கூறப்படுகிறது. நேருஇப்படித்தான் செல்வார் என்று முன்கூட்டியே எதிர்பார்க்கப் பட்டிருந்ததாக அவர்கள் கூறுகிறார்கள். பிரேமதாஸ ஏற்கனவே ரெலோவிலிருந்து ஒரு திவ்வியநாதனைக் கழட்டி எடுத்தவர். பின்னர், ஈ. என். டி. எல். எவ் இலிருந்து ஒரு சிறினிவாசனைக் கழட்டி எடுத்தார் இப்பொழுது கொங்ரஸிலிருந்து நேரு. விரைவில், இப்பொழுது ரெலோ எம். பி. யாகவிருக்கும் கருணாகரனையும் அவர் ரெலோவிலிருந்து கழட்டி எடுத்து விடுவார்என்று ஊகிக்கப்படுகிறது.

கொழும்பில் தமிழ் மிதவாதிகள் மற்றும் இயக்கங்களின் அரசியல் தளம் ஊசலாடிக் கொண்டிருப்பதையே இது காட்டுகிறது. கொழும்பில் அவர்களுடைய அரசியல் பெரும்பாலும் ஒரு புகலிட அரசியலாகவே மாறிவிட்டது. புலிகளுடையது அல்லாத ஒரு அரசியலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் கொழும்பில் அவர்களுக்குள்ள ஒரே பாதுகாப்பு. தெரிவுக்குழு அவர்களை மேலும் மோசமாக் பலவீனப்படுத்தி விட்டது. அவர்களுக்கிருப்பதெல்லாம் அநேகமாகஇரண்டு தெரிவுகள்தான். ஒன்றில் ஈ. பி. டி. பி. போல, நேரு, சிறினிவாசனைப்போல பிரேமதாசாவிற்கு முழுவிசுவாசமாக மாறிவிட வேண்டும் அல்லது ஈ. பி. ஆர். எல். எவ். போல ரி. யு. எல். எவ். போல புதுடில்லியில் எசமானர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது தமதுகுடும்பங்களையும் பாதுகாப்பிடங்களையும் இந்தியாவில் வைத்திருத்தல் வேண்டும். இரண்டுமில்லாமல், தமிழ்த் தேசிய வாதத்திற்கும் அவர்களிற்குமான மிகப் பலவீனமான இணைப்பைத் தொடர்ந்து பேணுவதென்றால் குறைந்த பட்சம் குமார் பொன்னம்பலத்தைப் போல பலமான குடும்பப் பின்னணியையும் வளமான பொருளாதாரத் தளத்தையுமாவது கொண்டிருத்தல் வேண்டும்.

சற்று எதிர்மறையாகக் கூறுவதானால் கொழும்பில் அவர்களுடைய பலம் புலிகள்தான், தொடரும் யுத்தம்தான் அவர்களுக்குள்ள ஒரே பேரம் பேசும் சக்தி. ஒரு விவாதத்திற்காக, புலிகள் யுத்தத்தில் முறியடிக்கப் படுவார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது கொழும்பு அவர்களை நிபந்தனைகளின்றிக்கைவிட்டு விடும். அல்லது புலிகளுடன் கொழும்பு ஒரு இணக்கத்திற்கு வருகிறது என்று வைத்துக்கொண்டாலும், அப்பொழுதும் மேற்படி கட்சிகள், இயக்கங்களின் கதி நிச்சயமற்றதாகி விடும். அவர்கள் கைவிடப்படமாட்டார்கள் என்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் இல்லை.

**நிலாந்தன்**

# வீரமும் பெண்களும்




**பெ**ண்நிலைவாதக் கருத்துக்கள், எமது நாடு உட்பட பல நாடுகளிலும் இன்று விரவிக் காணடபடுகின்ற பொழுதிலும், ஆண்களைப் பொறுத்தவரை அவர்களை அறியாமலேயே வீரம் என்றால் ஆண்களுக்கே உரிய சிறப்பியல்பு என்ற கருத்து அடிமனதில் வேரூன்றித்தானிருக்கின்றது.

இலத்தீன் மொழியில் 'Vir-(வீரன்) என்பது ஆண்பாலையே சுட்டும். அம்மொழியிலே ஈனித் [Aeneid)என்ற காவியத்தை இயற்றியவேர்ஜில்(Vergil) 'arma virumque cano' ('ஆயுதங்களையும் வீரனையுமே நான் பாடவிழைகின்றேன்') என்ற முதல் வரியுடனேயே தொடங்குகின்றான்.

ஆண்களுக்கும் வீரத்திற்குமிடையே உள்ளார்ந்ததொடர்பு உள்ளது என்று தொன்று தொட்டு வந்திருக்கும் எண்ணக்கருவை அடேல் ஆனின் Women Fighters of Liberation Tigers (விடுதலைப் புலிகளின் பெண்போராளிகள்) தகர்தெறிகின்றது.

111 பக்கங்களைக் கொண்டுள்ள இந்த ஆங்கில நூலிலே ஆசிரியை முதல் அத்தியாயத்திலே தமிழ் மக்களுக்கு எதிராக அரசு மேற்கொண்டுள்ள, மேற்கொண்டு வரும் வரலாற்றினை இரத்தினச் சுருக்கமாகக் கூறுகின்றார்.

இரண்டாவது அத்தியாயம் கணவனையும் சமையலறையையும் தெய்வங்களாக மதித்துவந்த, மதிக்கப்பழக்கப்பட்டு வந்த தமிழ் பெண்கள் எவ்வாறு சிங்களஇராணுவம் அஞ்சும் போராளிகளாகப் பயிற்றப்படுகின்றனர் என்பதைவிபரிக்கின்றது.

ஒக்டோபர் 1986இல் மன்னாரில் முதன் முதல் களத்தில் குதித்த இப் பெண்போராளிகள் நவம்பர் 1992இல் பலாலி முகாம் மீது மேற்கொண்ட பெரும் தாக்குதலை விரித்துரைக்கின்றது. இந்நூல். இப்பகுதியே இந்நூலின் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. பெண் போராளிகள் ஆண்களுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்களல்ல என்பதை இப்பகுதி எண்பிக்கின்றது.

கொக்காவில், யாழ் கோட்டை, மணலாறு போன்ற பல்வேறுகளத்திலே பெண்போராளிகள் வெளிப்படுத்திய வியத்தகு வீரத்தை, அடேல் ஆனின் உயிர்த்துடிப்பானவர்ணனைகள் எம் கண் முன்னாலேயேநடைபெறுவது போன்ற பிரமையைத் தோற்றுவிக்கின்றன.

அனைத்துலக மொழிகளில் ஒன்றாகிய ஆங்கிலத்திலே இப்போராளிகளின் வீரத்தை அடேல் ஆன் வெளிப்படுத்த முற்பட்டிருப்பது பொருத்தமே.

எம்மவர்களும் இப் பெண் போராளிகளின் வீரத்தை அறிவதற்கு உதவியாக இந்நூல் தமிழிலும் வெளிவரவேண்டும் என்பதே எனது ஆணித்தரமான கருத்து. அப்பொழுது தான் முற்றத்து மல்லிகைக்கும் வாசனையுண்டு என்பதை நம்மவர்கள் உணர்வார்கள்.

**ஜே. ராஜ்**

# ஒரு சிங்கள வரலாற்று ஆசிரியரின்

# பேரினவாதக் கர்ச்சனை

சிங்கள இளம் மாணவர் சமுதாயத்தில் சிங்கள மொழி மூலம் கல்வி கற்பிக்கும் வரலாற்று ஆசிரியர்கள் பேரினவாதச் சிந்தனைகளை ஊட்டுவதில் பெரும் பங்காற்றுகின்றனர். இது குறித்து ''சமாதானத்தின் தூதுவர்களா? அல்லது பரிநாசத்தை விளைவிப்பவர்களா?'' என்றதலைப்பில், 'பிரவாத' என்னும் சஞ்சிகையில் சசங்கா பெரேரா என்பவர் எழுதிய கட்டுரையில் ஒரு சிங்கள வரலாற்று ஆசிரியனின் சிந்தனைகளை இங்கே தருகின்றோம்.

கேள்வி: நீங்கள் கற்பிக்கும் வரலாற்றுப் பாடங்கள் நியாயமான அளவிற்குச் சரியானவை என நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

பதில்: அதைப்பற்றிச்சந்தேகமில்லை. பாடத்திட்டங்களும் பாடவிதானங்களும் மிகவும் திறமைவாய்ந்தவர்களாலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலாக எமது வரலாற்றினைப் பொறுத்தவரையில் மிகவும்நம்பகரமான கைநூலாக நன் மகாவம்சத்தைப் பயன்படுத்துகிறேன்.

கேள்வி: சிங்கள மக்களைப் போலவே தமிழர்களுடைய காலமும் இலங்கையில் பழமை வாய்ந்தது எனவும் எல்லோராலும் நம்பப்படுவது போல இந்தியாவின் வடக்கில் இருந்தல்லாமல் சிங்களவர்களும் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்களே எனறும் நவீன ஆய்வுகள் தெரிவிக்கின்றனவே. அதை நீங்கள் அறிவீர்களா? சிங்களவர்களினுள்ளே நவந்தன, சாலகம போன்ற சாதிக் குழுக்கள் கேரளாவிலிருந்து 15ஆம்நூற்றாண்டில் வந்தவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

பதில்: என்னுடைய 18ஆண்டு கால ஆசிரிய வாழ்க்கையிலோ பல்கலைக் கழக மாணவனாக இருந்த காலத்திலோ இப்படியானதொரு கட்டுக்கதையை நான் கேள்விப்படவில்லை. சிங்களவர்களே இங்கு முதலில் வந்தவர்கள். நீண்ட காலத்தின் பின் இங்குவந்தவர்களே தமிழர்கள் பல வரலாற்றாசிரியர்களைப் போலவே மகாவம்சமும் இவ்விடயம் குறித்து தெளிவாகக் கூறுகிறது. சிங்களவர் எப்போதும் வட இந்தியாவில் இருந்து வந்தவர்களே ஒழிய ஒருபோதும் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்களல்ல. எங்காவது ஓரிரண்டு திருமணக் கலப்புகள் நடந்திருக்கக் கூடுமாயினும் இது ஒரு போக்காக இருந்ததில்லை. சமூகக் கல்வியைக் கற்பிக்கத் தொடங்கு முதல் நான் ஒரு சரித்திர ஆசிரியனாக இருந்தேன். ஆகவே இது எனக்கு நன்றாகவே தெரியும். இப்போது நீங்கள் குறிப்பிடுகின்ற இத்தகைய கருத்துக்களும் தத்துவங்களும் சுத்தமான தமிழர் பிரசாரம் மட்டுமல்லாமல் மேற்கத்தேயப் படிப்புப் பின்னணியைக் கொண்டவர்களே அதை அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர்.

கேள்வி: சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் தொடர்ச்சியான பிரச்சினை இருந்துள்ளதாக வரலாறு கற்பித்தால் சமகாலத்தில் இனங்களுக்கிடையிலான உறவைப் பாதிக்கும் என நீங்கள் கருதவில்லையா?

பதில்: நாம் எப்போதும் தமிழர்களால் பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்துள்ளோம். அது மட்டுமல்லாது இப்பிரச்சினைகள் அவர்கள் இல்லாது போகும்வரை (Until we get rid of Them) இருந்து கொண்டுதான் இருக்கும். இத்தனைக்கும் எங்களுக்கு வேறு போக்கிடம் கிடையாது. அவர்களுக்கோ தமிழ்நாடு இருக்கிறது. மேலும் என்ன பாதிப்புகள் ஏற்பட்டாலும் எமது இளம் சந்ததியினருக்கு அவர்களது மூதாதையர்கள் செய்த தியாகங்களைக் கற்பிக்காமல் இருக்க முடியாது. நாம் அவர்களுக்கு எமது பொலிஸ், இராணுவம் ஆகியவற்றின் தியாகங்கள் துட்டகைமுனு. முதலாம் விஜயபாகு ஆகியோரின் தியாகங்களுக்கு ஈடானவை எனறு தெரிவிக்க வேண்டும்.

கேள்வி: அரசியல் பேச்சுவார்த்தையே இராணுவவழியை விட இப்பிரச்சினையைத் தீர்க்க உகந்த வழி என நீங்கள் கருத வில்லையா?

பதில்: நான் எப்போதும் எனது மாணவர்களுக்கு கூறுவது, அரசியல்தான் எங்களைப் பழுதாக்கி விட்டது என்பதே. நாங்கள் இராணுவ ரீதியாக இப்பிரச்சினையை இல்லாது ஒழிக்க வேண்டும். ஒருகால் அவர்கள் தோற்கடிக்கப்பட்ட பின் அவர்களது குறைகளைப்பற்றி யோசிக்கலாம். பிரச்சினையே, அவர்கள் எப்போதும் தமக்குரியதைவிட அதிகமாகக் கோருவதேயாகும் இத்தனைக்கும் நாம் பெரும்பான்மையாகவும் முதலில் நாட்டுக்கு வந்தவர்களாகவும் இருக்கிறோம்.

கேள்வி: சமூகக்கல்வியில்வரும் சரித்திரப்பாடங்களுக்கு மேலாக சமகால இனப் பிரச்சினை தொடர்பாக உங்கள் கருத்துக்களை நீங்கள் மாணவர்களுக்குத் தெரிவிப்பதுண்டா?

பதில்: ஆம் எப்போதும் ஒரு ஆசிரியன் என்றவகையில் அது எமது கடமை.

கேள்வி: மற்றைய ஆசிரியர்கள்....

பதில்: அவர்களும் தான். நான் முதலில் சொன்னதுபோல இது அவர்களது கடமையாகும்.

கேள்வி; இங்குள்ள சிலர் நீங்களும், வேறு சில ஆசிரியர்களும் 83இல் தமிழர்களுக்கெதிரான தாக்குதலில் ஈடுபடுமாறு மாணவர்களைத் தூண்டியதாகக் கூறுகின்றனர். சில ஆசிரியர்கள் இனவாதிகள் என்றும் கூறுகின்றனர்?

பதில்: சுத்தமான பொய், மார்க்சிஸ்டுகளும், மேற்கத்தேய படிப்புப் படித்த ''துப்பாஹியாஸ்''களும்தான் எல்லாத் தேசாபிமானிகளையும் இனவாதிகள் என்று கூறுகின்றனர். அவர்கள் துட்டகைமுனு மன்னரையும், அனகாரீக தர்மபாலாவையும்இனவாதிகள் என்கின்றனர். நான் ஒரு போதும் யாரையும் தாக்கவோ, கொல்லவோ எனது மாணவர்களிடம் கூறியதில்லை. நாங்கள் பௌத்த சமயத்தவர்கள். ஆனால் தேவை ஏற்படும் போது எமது நாட்டிற்காக எமது மாபெரும் தலைவர்களைப்போல் சுயமாக முன்வந்து போராட எமது மாணவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

கேள்வி: ஆகவே மாணவர்களை உங்களுக்கு விருப்பமான வழியில் செல்ல உங்கள் செல்வாக்கை பயன்படுத்துவது சரியென நினைக்கிறீர்கள்?

பதில்: ஆம் அது உண்மையான ஆசிரியர்களது கடமை.


**LONDON EXAMS**

Nov. / Dec - 1993

WEEK - END CLASSES

| | | FEES |
|---|---|---|
| C. I. M. A. (Stage -1) | | 2, 250/- |
| I. A. B. | (Foundation) | 600/- |
| | (Intermediate) | 700/- |
| | (Final) | 800/- |

ஆரம்பம்: 08. 05. 93

★ பிரபல விரிவுரையாளர் குழு
★ கட்டணம் தவணை முறையில்.

BASIC, LOTUS 1-2-3
SHORT - HAND & TYPING
நடைபெறுகின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd Cross Street, Jaffna.
(சி-6480)



அராலி திருமகள் சிறுவர் பாடசாலை நிதி வளர்ச்சிக்காக

**மாபெரும் நாடகக்கலைவிழா**

காலம்: 24. 04. 93 சனிக்கிழமை
நேரம்: இரவு 8. 00 மணி
இடம்: யாழ். அராலி இந்துக்கல்லூரி மைதானம்

நிகழ்ச்சிகள்

யாழ். நாவாந்துறை கெனடிஸ் ச.ச. நிலையம் கலைகலாசாரப் பிரிவு வழங்கும் ராஜன் நடராஜாவின்

★ ஒரு தாயின் பரிசு ★

சாந்தையூர் விநாயகர் நாடகமன்றம் வழங்கும் A .S. சந்திரனின்

★ வானம் வெளுக்கிறது ★

இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ் S. G. சாந்தன் இசைக்குழுவினர் வழங்கும்

★ இசையமுதம் ★

[இத்துடன் அதிர்ஷ்டம்பார்க்கப்படும்] ஒலிஒளிகண்ணன்

பிரவேசம் ரூ. 10/- -நிர்வாகிகள்

(4744)



பதிவு

செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

[சி-6438]



**A / L**

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

**இந்துசமயம்**

| | |
|---|---|
| A/L 93 (Paper) | — 8 - 9 |
| A/L 93 | — 1 - 2 |
| A/L 94 | — 3 - 4 |
| A/L 95 | — 2 - 3 |
| A/L 93 (Day) | — 9 - 10 |

**அரசியல்**

- கியூபேட் -

| | |
|---|---|
| A/L 93 (Paper) | — 11-12 |
| A/L 93 | — 12-1 |
| A/L 94 | — 10-11 |
| A/L 95 | — 8-9 |
| A/L 93 (Day) | — 11-12 |

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-6481)



ஈழத்துநூல், சஞ்சிகை, சிற்பம், ஓவியம், புகைப்படம்

**சித்தவைத்தியக் கண்காட்சி 1993**

அன்பர்கள், அபிமானிகள், நிறுவனங்களிடமிருந்து இக்கண்காட்சியில் வைப்பதற்கு நூல்கள், சஞ்சிகைகள், ஏட்டுச் சுவடிகள் ஆகியவற்றை எதிர்பார்க்கின்றோம். விரும்புவோர் 1993-04-27ஆம் திகதியிலிருந்து 93-05-05 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை. (திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்) காலை 9 00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை யாழ்மாநகர சபைப் பிரதம நூலகரிடம், நல்லூர்க் கிளை நூலகத்தில் கையளிக்கலாம்.

சிற்பங்கள், ஓவியங்களைக் கையளிக்க விரும்புவோர், 1993-04-27ஆம் திகதி காலை 9 00 மணியிலிருந்து 93-05-15ஆம் திகதி மாலை 4.00 மணிவரை யாழ்இந்துக் கல்லூரியில் சித்திர ஆசிரியர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம், சனி ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில், கையளிக்கலாம்.

புகைப்படங்களைக் கையளிக்க விரும்புவோர் 93-04-27ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 93-05-20 ஆம் திகதி பி.ப. 4 00 மணிவரை, சனி ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் யாழ்பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகத்தில் திரு.சசி கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் கையளிக்கலாம்.

சித்த மருத்துவர்கள் தங்களிடமுள்ள வைத்திய நூல்கள், சஞ்சிகைகள், மருத்துவ ஏடுகள், மருந்துகள். மூலிகைகள் ஆகியவற்றைக் கையளிக்க விரும்புவோர், யாழ். பழைய மின்சார நிலையத்தில் உள்ள சித்த வைத்திய சாலையில், யாழ். மாநகர சித்த மருத்துவத் தலைவர் வைத்திய கலாநிதி பொ. இராமநாதன் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

எம்மினத்தின் வரலாற்றினையும், கலை கலாசார மேம்பாட்டினையும் எடுத்துக் காட்டும் பழைய சாதனங்களை வைத்திருப்போர் அவற்றினைக் கண்காட்சியில் வைப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இக் கண்காட்சியில் காட்சிப் பொருள்களை நேரடியாக வைத்திட விரும்புவோர் யாழ்ப்பாணம் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களோடு எழுத்து மூலம் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் / இணைப்பாளர், கண்காட்சிக் குழுக்களின் சார்பில்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
93-04-19 (சி/6483)

# ஐக்கிய தேசியக் கட்சியும் விகிதாசார பிரதிநிதித்துவமும்




**1978**இல் ஐக்கிய தேசியக் கட்சியினால், நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட விகிதாசார தேர்தல்முறை இன்று அக் கட்சிக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாக மாறியுள்ளது. இலங்கையின் 'சுதந்திரத்தின்' பின் நடைபெற்ற தேர்தல்களை நன்கு கணிப்பீடு செய்து கிழநரி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் உருவாக்கப்பட்ட இத்தேர்தல் முறை என்றுமே ஐ. தே. கட்சியை தோற்கடிக்கப்பட முடியாத கட்சியாக ஆட்சி அதிகாரத்தில் அமர்த்துவதையே நோக்கமாகக் கொண்டதாகும். ஆனால் மே மாதம் 17ஆம்திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல், இந் நோக்கத்தை சில வேளை சிதைத்து விடக் கூடியது எனக்கருதப்படுகிறது.

இலங்கையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா பாராளுமன்ற அரசியல் முறையில்கைதேர்ந்த நிபுணர் என வர்ணிக்கப்படுகின்றவர் இன்று தனது அரசியல் வாழ்வில் 50 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள இக்கிழநரி தான் இறக்கும் வரையில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதற்காகவும், இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் ஐ.தே.கட்சியே தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்பதற்காகவும் உருவாக்கியதே1978-ம்ஆண்டுஅரசியல் யாப்பில் ஏற்படுத்திய மாற்றம் ஆகும்.

ஆனால், பாராளுமன்ற நெளிவு சுழிவுகளை நன்கறிந்த கிழநரி தமிழரின் ஆயுதப்போராட்டத்தை சரியாகக் கணிப்பீடு செய்யத் தவறியமை காரணமாக இடையிலேயே அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டிய துயர நிலை அதற்கு ஏற்பட்டது. இதேவேளை ஐ.தே.கட்சிகுள் எழக்கூடிய அதிகாரப் போட்டியை சரியாக மதிப்பீடு செய்யத் தவறியமையானது. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஐ. தே. கட்சியின் ஆட்சியைத் தொடர்ந்து பேண உதவுமா? என்ற கேள்வியைத் தற்பொழுது எழுப்பியுள்ளது.

## 1

இலங்கையில் 1952ஆம் ஆண்டிற்கும் 1977ஆம் ஆண்டிற்கும் இடையில் ஏழு பொதுத் தேர்தல்கள், (1952, 1956, 1960ஜன, 1960யூலை, 1965, 1970, 1977 ) இடம் பெற்றிருந்தன. இதில் நான்கு தடவைகள் ஐ. தே. கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. மூன்று தடவை சு. கட்சி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.

ஆட்சி அதிகாரங்கள் ஐ தே. கட்சியிடமும், சு. கட்சியிடமும் மாறி மாறி கிடைக்கப் பெற்றபோதும் தேர்தலில் கிடைக்கப் பெற்ற வாக்குஎண்ணிக்கைகளை கணிப்பீடு செய்தால் 1956ஆம் ஆண்டு தேர்தலில் மட்டுமே சு.கட்சி ஐ. தே. கட்சியைவிட கூடுதலான வாக்கு வித்தியாசத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றது. இதற்கு தனிச் சிங்களச்சட்டம் உதவியது.

இத்தேர்தலில் சு. கட்சி சுமார் 40 வீதமான வாக்குகளை பெற்றபோதும் ஐ.தே. கட்சி 28 வீதத்திற்கும் குறைவான வாக்குகளையே பெற்றது. ஆனால் 1970 இல் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 90 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்தபோதும் ஐ.தே.கட்சியைவிட ஒரு வீதமான வாக்குகளையே கூடுதலாகப்பெற்றது. அதாவது 16 ஆசனங்களை மட்டுமே பெற்ற ஐ.தே.கட்சி 36.8 வீதமான வாக்குகளைப் பெற்றவேளையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் 37.8 வீதமான வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது.

இதேவேளை 1960 இல் சுதந்திரக்கட்சி 75 ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தபோதும், 27 ஆசனங்களை மட்டும் கைப்பற்றியிருந்த ஐ.தே.கட்சி 35.9 வீதமான வாக்குகளையும் பெற்றுக்கொள்ள சு.கட்சி 34.5 வீதமான வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது.

மறுவளமாக ஐ.தே.கட்சி தேர்தலில் வெற்றி பெற்ற 1960மே 1965 1977 ஆம் ஆண்டு தேர்தல்களில் ஐ.தே. கட்சி வெற்றிபெற்று ஆட்சி அமைத்த வேளையில் அதன் வாக்குகள் எப்பொழுதும் சு. கட்சியைவிட மிக அதிகமாகவே இருந்தது. இவ் இடைவெளி 1977 ஆம் ஆண்டு தேர்தலில் சுமார் 20 வீதத்திற்குமேலாக இருந்தது. (ஐ. தே. க - 51.7, சு. கட்சி 30.2 வீதம்).

## 2

இவ்வாறான தேர்தல் முடிவுகளை நன்கு கணிப்பீடு செய்தே 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு மாற்றத்தின் போது விகிதாசாரத் தேர்தல்முறை அறிமுகமாக்கப்பட்டது. ஆனால் இத் தேர்தல்முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட போது அப்பொழுது இருந்த இரு கட்சி முறையிலான ஜனநாயக ஆட்சி அமைப்பு முறையே தொடர்ந்தும் சிறிலங்காவில் அரசியலில் இருக்கும் என ஐ. தே. கட்சியினர் எண்ணியமையே அவர்களின் அரசியற் கணிப்பீட்டில் ஏற்பட்ட தவறாகும்.

இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களில், 1952 ஆம் ஆண்டு தேர்தலின் பின் இடதுசாரிகள் படிப்படியாகப் பலமிழந்து 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் மிகவும் பலவீனமான நிலையை அடைந்தனர். அவர்களினால் மொத்த வாக்குகளில் 5 வீதத்தைத் தானும் பெறமுடியாத நிலையில் 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் இருந்து இருமுனைப் போட்டிகளே இடம்பெற்று வந்தன. இடதுசாரிகளும் மற்றவர்களும் தேர்தலில் போட்டியிட்டாலும் அவர்கள் இவ்விரு கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து அல்லது ஓரிரு ஆசனங்களைப் பெற்ற பின்னர் அரசாங்க எதிர்க்கட்சி வரிசையில் ஏதோ ஒன்றில் அமர்ந்தனர். அக்கட்சிகளிடம் அரசியலின் போக்கை நிர்ணயிக்கக் கூடிய பலம் இருக்கவில்லை.

ஆகையினால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அமுல்படுத்த ஐ. தே. கட்சி யோசித்த போது மூன்றாவது ஒரு போட்டியாளரை கணிப்பீடு செய்வது என்பது ஒரு கற்பனை கலந்ததாகவே இருந்திருக்கும். அத்தோடு கடந்த காலங்களில் ஐ. தே. கட்சியில் இருந்து உள்முரண்பாடு காரணமாக விலகிச் சென்றுள்ளார்கள் அக்கட்சிக்குச் சவால் விடும் அளவில் அரசியலில் திறம்படச் செயற்படமுடியாமல் போனமை ஐ. தே. கட்சியை மூன்றாம் அணிபற்றி அச்சம் கொள்ளாது இருக்கச் செய்திருக்கலாம். இதன் காரணமாக பலமான இரண்டு எதிர் அணிகளால் விகிதாசார பிரதிநிதித்துவத்தில் உள்ள ஆபத்தை அவர்கள் கணிப்பீடு செய்யத் தவறிவிட்டனர்.

ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இவ் விகிதாசார முறையை உருவாக்கியபோது எதிர்காலத்தில் ஐ. தே. கட்சியினுள் ஏற்படவுள்ள உடைவைக்கணிப்பீடு செய்யமுடியாமல்போனது ஐ தே. க. தலைவரைப்பொறுத்தும் அவரைப் பொறுத்தும் துரதிர்ஷ்டமானதுதான். ஆனால் இந்த துரதிர்ஷ்டமான முடிவானது அவர் ஐ தே கட்சிக்குள் நடாத்திய அரசியல் விளையாட்டினால் விளைந்தது என்பதுவே அதைவிட முதன்மையானது.

## 3

இவ்வாறாக ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசியற் கணிப்பீட்டையும் மீறி தவிர்க்க முடியாமல் ஏற்பட்ட ஐ. தே. கட்சியின் உடைவானது, தற்பொழுது மாகாணசபைத்தேர்தலில் மும்முனைப் போட்டி ஒன்றிற்கு தளம் அமைத்துள்ளது. இம்மும்முனைப் போட்டியானது ஐ. தே. கட்சிக்கு இருமுனைப் போட்டி நிலவிய காலத்தில் இருந்த தேர்தல் அனுகூலங்களை வெகுவாகப் பாதிக்கும் என்பதில், சந்தேகம் கொள்ள எதுவுமில்லை என்றே கூறலாம்.

ஐ தே.கட்சியில் இருந்து பிரிந்துசென்று புதுக்கட்சி அமைத்துள்ள லலித் - காமினி குழுவினரின், அரசியலில் செல்வாக்கு என்பது அவர்கள் ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேறிய பின்னர், இதுவரையில் மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆயினும் தென்னிலங்கையில் நடைபெறும் சம்பவங்களும் ஐ. தே. க. மேற்கொள்ளும் கெடுபிடிகளும், அவர்களின் செல்வாக்கு ஐ. தே. கட்சிக்கு குறிப்பிடக் கூடிய அளவில் தலைவலியை ஏற்படுத்தும் நிலையில் உள்ளதாகவே அனுமானிக்கமுடிகின்றது.

ஏனெனில்மூன்றாவது அணியாக உருவாகியுள்ள அணியானது ஐ. தே கட்சியில் இருந்து உருவாகியுள்ளமையே இத்தலைவலிக்குரிய பிரதான காரணமாகும். அதாவது இவ் அணி உடைக்கப் போவது சுதந்திரக் கட்சியின் வாக்குகளையோ அன்றி இடதுசாரிகளின் வாக்குகளையோ அல்ல. 1977 ஆம்ஆண்டிலிருந்துஐ.தே.கட்சியினால் பலமுறை சுதந்திரக் கட்சி தோற்கடிக்கப்பட்டபோதும் அரசியலில் நெருக்குதல்களுக்கும், பழிவாங்கலுக்கும் உள்ளாக்கப்பட்டபோதும் கணிசமான ஆசனங்களையும் வாக்குகளையும் பெற்றுக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் இனிவரும் தேர்தலில் பெரியளவில்பிரிந்து லலித் — காமினி குழுவினரின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குச் செல்லும் என எதிர்பார்க்க முடியாது. சில வேளை, மிகச் சிறிதளவு செல்லலாம். ஆனால் அது பெரும் தாக்கம் விளைவிற்கும் அளவில் இருக்கப்போவதில்லை.

ஆனால், முழுமையாக பாதிக்கப்போவது ஐ. தே. கட்சியையே ஆகும். கடந்த தேர்தலின் போது, ஐ. தே கட்சியின் முன்னணி தலைவர்களாக விளங்கிய மூன்று தலைவர்களில்(பிரேமதாசா, லலித், காமினி) இருவர் இன்று இக் கட்சியில் இல்லை. இவர்களில், லலித் காமினி இருவரும், ஐ. தே.கட்சியின் தளத்தில் நின்று போட்டியிட்டே கடந்தமுறை தேர்தலில் அமோக வெற்றியீட்டியவர்களானாலும், தனிப்பட்ட ரீதியிலும் பலமான மக்கள் ஆதரவு கொண்டவர்கள் என்றே நம்பப்படுகின்றது. இதனை கடந்த (1989ஆம் ஆண்டு) பொதுத் தேர்தலின் போது அவர்களுக்குக் கிடைத்த வாக்குகள் நிரூபிப்பதாக உள்ளது. லலித் தான் போட்டியிட்ட கொழும்பு மாவட்டத்தில், 2,35,000க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று அத்தேர்தலில் விருப்பத்திற்குரிய அதிகூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் ஆக நியமனம்பெற்றவர்இதேபோன்றே நுவரேலியா மாவட்டத்தில் போட்டியிட்ட காமினி திஸநாயக்கா 73,790 வாக்குகளைப் பெற்று இலங்கையிலேயே விருப்பத்திற்குரிய கூடுதலான விகிதாசார வாக்குகளைப்பெற்று எம். பி. ஆக தெரிவானவர். ஐ.ஐ தே. முன்னணியின் அடுத்ததலைவரான பிரேமச்சந்திரவும் பொலநறுவை மாவட்டத்தில் விருப்பத்திற்குரிய அதிகூடிய வாக்குகளைப்பெற்றுக்கொண்ட எம். பி ஆவார்.

இந்நிலையில், ஐ.தே. கட்சியின் வாக்குகளில் குறிப்பிடத்தக்க பிளவை இவர்கள் ஏற்படுத்தக்கூடியவர்கள் என்றே கருத இடமுண்டு. அதிலும், மும்முனைப் போட்டி என்ற நிலையில், எதிர்கட்சிகள் வாக்குகள் (குறிப்பாக சு. கட்சியின் வாக்குகள்) பிளவு படாத நிலையில் ஐ. தே. கட்சிக்கு மூன்றாவது அணியின் பிரவேசம் நெருக்கடியான தொன்றாகவே இருக்கும் எனக் கொள்ளலாம்.

ஆகையினால், ஐக்கிய தேசியகட்சி தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை வெல்லும் வலுவுள்ள கட்சியாக இருப்பினும், இரண்டுபலமான எதிர்க்கட்சிகள் கூட்டுச் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ நின்று எதிர்த்து வாக்களிக்கும் பட்சத்தில் மாகாணங்களில் ஆளும் கட்சி பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்நிலையில், இம் மாகாணசபை தேர்தல் ஐ தே. கட்சியைப் பொறுத்து பெரும் அக்கினிப் பரீட்சை என்பதில் தவறில்லை. இதனை உணர்த்துமாப்போல் தற்பொழுது வெளியாகும் சில கருத்துக்கணிப்புகளும் ஐ. தே. கட்சியின் வெற்றிவாய்ப்பு முழுமையானதாகத் தென்படவில்லை எனத் தெரிவிக்கின்றன.

## 4

ஆனால், சிறிலங்காவில் நடைபெறப் போகும் தேர்தல் எந்தளவிற்கு ஜனநாயக ரீதியானதாக இடம் பெறப்போகின்றது என்பதைப் பொறுத்தே மேலே கூறப்பட்ட அரசியல் எதிர்பார்க்கைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டியனவாகவுள்ளன.

சிறிலங்காவில் 1977இல் ஐ. தே. கட்சி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், தேர்தல் ஜனநாயகம் என்பது அற்றுப் போயுள்ளது என்றே கூறலாம். ஆகையினால் தேர்தல்மோசடிகள் இடம்பெறலாம் எனஎதிர் பார்க்கப்படும் அதேவேளை, அவை கண்காணிப்பாளர்களால் கண்டுபிடிக்கப்படமுடியாதவை எனவும் அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இதற்கு ஆதாரமாக ஆபிரிக்க-ஆசிய நாடுகளில் கடந்த காலத்தில் தேர்தல் மோசடிகளை சர்வதேச கண்காணிப்புக் குழுவினராலும் கட்டுப்படுத்தமுடியவில்லை எனச் சுட்டிக்காட்டுவார்கள், 1988 ஜனாதிபதி தேர்தலின் போது அமைக்கப்பட்ட உள்ளூர் கண்காணிப்பாளர் குழு அதன் செயற்பாட்டை விரிவாக்குவதற்குப் போதிய அவகாசம் வழங்கப்படவில்லை என்பதையும் குறிப்பிடுகின்றனர். அத்தோடு, ஆயுதப்படையின் உதவியோடு மேற்கொள்ளப்படும் மிகவும் நுணுக்கமான தேர்தல் மோசடிகள் நிரூபிக்க முடியாதவை எனவும் மார்கோஸ்காலத்து பிலிப்பைன்ஸ் அனுபவங்கள் வெளிப்படுத்துவனவையாகவுள்ளன. இதனை சிறிலங்கா தேர்தல் ஆணையாளரே வெளிப்படையாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், வாக்காளர்கள் எதை விரும்புகின்றனர்? யாரை விரும்புகின்றனர் என்பதை சிறிலங்காவில் நடைபெறவுள்ள தேர்தல் முழுமையாகப் பிரதிபலிக்குமா என்பது சந்தேகமே. ஆனால் ஆட்சியிலுள்ள ஐ. தே. கட்சியும், அதன் தலைவரும் எதைவிரும்புகின்றனர் என்பதைப் பொறுத்தே தேர்தல்முடிவுகள் அமையலாம். அதற்கு அவர்களின்கைகளில்உள்ளஅரசஇயந்திரமும் ஆயுதமும் பெரும் துணைபுரிபவையாக இருக்கும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

**- ஜெயராஜ்**

தமிழகத்தில் கைதான

# எதிர்க்கட்சி எம்.எல். ஏக்கள் நீதிமன்றத்தால் விடுதலை

## காங்கிரஸ் உறுப்பினர் தலைமறைவு

(சென்னை)

நேற்று முன் தினம் இரவு கைதுசெய்யப்பட்ட சட்டப் பேரவை இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஞானசேகரன் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு பரிதி இளம்வழுதி ஆகியோர் நேற்றுக்காலை சென்னை மாநகர 7ஆவது குற்றவியல் நீதிமன்றத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

முன்னதாக இவர்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது நீதிமன்ற வளாகத்தில் பெருந்தொகையானோர்கூடி தமிழகஅரசுக்கு எதிராக கோஷம் எழுப்பி இரு உறுப்பினர்களையும் விடுவிக்குமாறு குரல் எழுப்பினர்.

இவர்கள் பேரவை காவலர்களை தாக்கியதாக சொல்லப்படும் குற்றச்சாட்டை நிரூபிக்கக்கூடிய வழக்கு கோப்புகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் பொலிஸார் தரப்பில் அவர்களை காவலில் வைக்கவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படாததாலும் இவர்கள் விடுதலை செய்யப்படுவதாக நீதிபதி தீர்ப்பளித்தார்.

முன்னதாக இவர்கள் இருவரும் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டபோது அதற்கு மறுத்துவிட்டனர்.

இதேவேளை சபைக்காவலர்களை தாக்கியதாக குற்றஞ் சாட்டப்பட்ட மற்றுமொரு காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்படுவதை தவிர்க்க தலைமறைவாகிவிட்டதாக நேற்று சட்டப்பேரவையில் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா குற்றஞ்சாட்டினார்.

## தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சுமுக நிலையிலாம்

### ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமையில் எந்த விதமான பாதிப்பும் இல்லாமையினால் பழனி, இராணிப் பேட்டை தொகுதி தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும் என தமிழக முதலமைச்சர்ஜெயலலிதா தேர்தல் ஆணையாளருக்கு உறுதியளித்துள்ளார்.

தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக நேற்று காங்கிரஸ் உட்பட தமிழக எதிர்க் கட்சிகள் நடத்திய அவசர கூட்டம் ஒன்றில்குறிப்பிட்டமை தெரிந்ததே.

## ஆளுநரை சந்திப்பர்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையின் காங்கிரஸ் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிய கம்யூனிஸ்ட் மற்றும் சுயேட்சை உறுப்பினர்கள் மாநிலஆளுனர் பீஷ்மநாராயண் சிங்கை சந்தித்து சட்டப் பேரவையில் அரசின் அராஜகத்தை எடுத்துரைக்கப் போவதாகவும் ஜனநாயகத்தை நிலைநாட்ட ஆளுநர் தலையிட வேண்டும் என்று கோரப்போவதாகவும் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் அரசியல் சட்டத்திற்கு அமைய ஆட்சி நடைபெறவில்லை என்றும் தாம் தமிழக ஆளுநரிடம் எடுத்துக் கூறப்போவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

### வீரவணக்கக் கூட்டம்

4 ஆம் மாதங்களில் (ஏப்பிரல்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம் கோட்ட சண்டிலிப்பாய் வட்டத்திற்கு உட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00மணிக்கு சண்டிலிப்பாய் தாடிசிறி வீதி, கல்வளை மைதானத்தில் நடைபெறும். [90]

### பிரேமச்சந்திரா

நேற்று நண்பகல் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை மாகாண சபைத் தேர்தலுக்குப் பொலிசார் முட்டுக்கட்டை போட எத்தனிப்பதையே காட்டுவதாக எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்கின்றனர்.

இச்சம்பவம்குறித்து ஜி எம். பிரேமச்சந்திரா கருத்துத்தெரிவிக்கையில்:

தமது குருநாகலை, மாவத்தகம வீட்டை இரவு 11 மணியளவில் சிவில் உடையணிந்த சுமார்முப்பதுக்கும் மேற்பட்ட பொலிசார் சுற்றிவளைத்து தனது நாற்பதிற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர் என்றும் பின்னர் அதிகாலை 4.30 மணியளவில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் குறிப்பிட்டார்.

இதில் தனது ஆதரவாளர் ஒருவர் பொலிசாரினால் தாக்கப்பட்டுள்ளார். இதில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி மனித உரிமைமீறல் தொடர்பாக விசாரணைசெய்யப்பட்டு வரும் நபராவார் என்றும் பிரேமச்சந்திரா மேலும் தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணி

## களுத்துறைப் பகுதியில் தோல்வியடையும் ஆபத்து

(கொழும்பு)

சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி களுத்துறை மாவட்டத்தில் படுதோல்வி அடையும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அமைப்பு களுத்துறை மாவட்டத்தில் தமது அபேட்சகர்களைத்தெரிவுசெய்வதில் இடம்பெற்றுள்ள குளறுபடிகள் காரணமாகப் படுதோல்வி அடைவதற்கு இடம் ஏற்பட்டுள்ளது என்று அகலவத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் குமார் வெல்கம கட்சிக்கும், முன்னணிச் செயலாளர்களுக்கும் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்காவிற்கும் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மலேசிய விசா திட்டம்; விமான சேவைகள் பாதிப்பு

(கொழும்பு)

மலேசிய அரசு நடைமுறைப் படுத்தியுள்ள புதிய விசா திட்டத்தினால் தெற்காசிய நாடுகளின் விமான சேவைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலேசியாவிற்கு உல்லாசப் பயணிகளாக செல்வோர் அங்கு வேலை செய்வதைத் தடுக்கும் நோக்கில் புதிய விசா விதிகளை அந்நாட்டு அரசு நடைமுறைப் படுத்தியதை அடுத்து இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய தெற்காசிய நாடுகளின் விமான சேவைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நாடுகளின் விமான சேவைகளைப் பயன்படுத்தும் பயணிகள் தொகை 50 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக கொழும்பில் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

க, பொ. த, (சா தர) பரீட்சை

## 950 பேரின் பெறுபேறுகள் இடை நிறுத்தம்

(கொழும்பு)

கடந்த க. பொ. த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளில் 950 பேர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பரீட்சை எழுதும்போது பிரதிபண்ணியது குறிப்புகளை எழுதி பரீட்சை மண்டபத்திற்கு கொண்டுவந்தது, ஆள் மாறாட்டம் ஆகிய காரணங்களினாலேயே பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன எனபரீட்சைஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். இதேவேளை ஆள் மாறாட்டம் தொடர்பாக இம்முறை 50 பேர் சிக்கினர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தபால் திணைக்கள கலந்துரையாடல்

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள், உப தபால் அதிபர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பிரதி அஞ்சல் மா அதிபர் கேட்டுள்ளார்.

### தெரிவுக்குழு

நினைவுகூர்ந்த ஜனாதிபதி லலித் அத்துலத்முதலி, காமினி திஸ்ஸநாயக்கா, பிரேமசந்திரா ஆகியோர் உட்பட தமது கட்சியைச் சேர்ந்த பத்துப்பேர் எதிர் கட்சியுடன் இணைந்து தமக்கு எதிராக சதி செய்ததாக தெரிவித்தார்.

### இளம்

வர்களுக்கும் இவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு முற்றிய நிலையில் அயலவரால், இறந்தவரான தருமராசா பலத்த வெட்டுக் காயங்களுக்கு உள்ளானர்.

பின்னர் இவர்கள் இறந்து கிடந்த அறையிலிருந்து நச்சு திராவகப் போத்தல் ஒன்று மீட்கப்பட்டது. இது தொடர்பாக காவல்துறையினர் விசாரணை நடத்திவருகின்றனர்.

### வர்த்தக

கிலிருந்து மேலும் பல மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளார்கள் என தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இப்பரீட்சையால் அடுத்ததாக பாதிக்கப்பட்டது வர்த்தகத் துறையைச் சேர்ந்த மாணவர்களே என்றும் இவர்களுக்கும் பொறியியல்துறைக்கு இரு வெட்டுப்புள்ளிகளும் ஒரே மாதிரி கருதப்படுவது போன்று வர்த்தகத்துறைக்கும் கருதப்பட்டு அதனால் பாதிப்படைந்த மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் தற்சமயம் வெளிநாட்டில் இருப்பதால் அவர் நாடுதிரும்பியதும் இவ்விடயம் பற்றிய தீர்க்கமான முடிவு எடுக்கப்படுமென்றார். (சி)

ஸ்ரீதர் திரையரங்கில்
100 RIFLES
[100 துப்பாக்கிகள்]
தமிழ் விளக்கம்
தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி
[சி-6376]

கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து மின்சார சபை ஊழியர்களையும், சுன்னாகம் மத்திய மின் நிலையத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களையும் வருகின்ற திங்கட்கிழமை 1993 -04 -26 ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

பிரதிப் பொது முகாமையாளர், (வடக்கு) இ. மி. ச., யாழ்ப்பாணம்.
மின் பொறியியலாளர் மத்திய மின் நிலையம், சுன்னாகம்.
(4747)

"வீடியோ கமரா"

வீடியோ எம். 7 கமரா உட்பட வீடியோ கமராக்கள் தேவை. விற்பனவிற்கு வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
ஈழநாதம்
31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்
(சி-6485)

அரிச்சந்திரனும் சந்திரமதியும்
நடாத்தும் வேள்வி
திருமறைக் கலாமன்ற மேடையில்
மிக விரைவில்
(சி-6484)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 22-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9098

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-3964, 27-0557, 24-7628, 28-3429, 41-9855
41-1665, 24-8353, 24-0192, 24-3262, 24-4103

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.